களத்தில்

(07.10.1999) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (196) அன்பளிப்பு : 60 p

இந்தப் போரைத் தொடங்கியதும், இந்தப் போரை நீடித்துச் செல்வதும் சிறீலங்கா அரசாங்கமே. தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வில் நம்பிக்கை கொண்டிருப்பதும் சிறீலங்கா அரசாங்கமே.

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

"நாம் சமாதானத்திற்குக் கதவடைக்கவில்லை. சமாதான வழியில் பேச்சுக்களை நடத்தி பிரச்சினையைத் தீர்க்கும் நாகரிகமான நடைமுறையையும் நாம் கைவிடவில்லை. சிங்களத் தலைமையின் நேர்மையில் எமக்கு நம்பிக்கை இல்லை என்பதால் சர்வதேச சமூகத்தின் முன்நிலையில் மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்துடன் நாம் சமாதானப் பேச்சுக்களில் பங்குகொள்ள தயாராக இருக்கின்றோம்."

தமிழீழத் தேசியத் தலைவரின் 1998 ஆம் ஆண்டு மாவீரர்நாள் உரையிலிருந்து...

பேச்சுக்கள் மூலமான தீர்வுக்கு சர்வதேச மத்தியத்துவம் தேவை!

கதிர்காமரின் நிலைப்பாட்டிற்கு புலிகள் பதிலடி

தமிழ் மக்களின் தேசிய இனச்சிக்கலிற்கு பேச்சுவார்த்தைகள் மூலமான அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டுமாயின் சர்வதேச மூன்றாம் தரப்பு மத்தியத்துவம் அத்தியாவசியமானதும் முக்கியமானதுமாகும் என தமிழீழ விடுதலைப் புலிகள் வலியுறுத்தியுள்ளனர்.

'இவ் இனச்சிக்கலை தீர்ப்பதற்கான முயற்சிகளில் சர்வதேச சமூகத்திற்கு குறிப்பிடத்தக்க பங்கு உண்டு என தமிழீழ மக்கள் கருதுகின்றனர்.

பேச்சுவார்த்தை மூலமான இணக்க முயற்சிகளுக்கு மூன்றாம் தரப்பு மத்தியத்துவம் தேவை என்பதை விடுதலைப் புலிகளின் தலைமை ஏற்கனவே பகிரங்கமாக பிரகடனப்படுத்தியுள்ளது. நாங்கள் சர்வதேச மத்தியத்துவத்தை விரும்புகின்றோம் எனெனில் இனச்சிக்கலின் இரு தரப்பினருக்கும் இடையே பரஸ்பர பகைமையும் அவநம்பிக்கையும் நிலவுகின்றது.'

என விடுதலைப் புலிகளின் தலைமைப் பணிமனையினால் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மத்தியத்துவமுடனேயே தமிழ் - சிங்கள தேசிய இனச்சிக்கலை தீர்க்க முடியும் என ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு என்ற அரச சார்பற்ற மனித உரிமைகள் அமைப்பு கருத்து வெளியிட்டுள்ளது. சிறீலங்கா அரசு அதிநவீன தொழில்நுட்பம்வாய்ந்த ஆயுத தளவாடங்களைக் கொள்வனவு செய்ய திட்டமிட்டிருப்பதை சுட்டிக்காட்டிய ஆணைக்குழு மிகவும் பயங்கரமான வகையில் போர் விரிவடைந்து பேரழிவுகள் ஏற்படப் போவதாகவும் எச்சரித்துள்ளது. ஐ.நா தலையீடு மட்டுமே உண்மையான அமைதிக்கான வழியெனவும் பிற முயற்சிகள் வெறும் 'வாய்ச்சவாடல்' எனவும் கூறியுள்ளது.

இக் கருத்துக்களை நிராகரித்த சிங்கள வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் சிறீலங்காவின் இனச்சிக்கல் உள்நாட்டு விவகாரம் எனவும் இதில் ஐ.நா உட்பட எவரும் தலையிடத் தேவையில்லை எனவும் மூன்றாம் தரப்பு மத்தியத்துவம் அவசியமில்லை எனவும் தெரிவித்தார்.

இந் நிலைப்பாட்டை விமர்சித்துள்ள விடுதலைப் புலிகளின் தலைமைப் பணிமனை கதிர்காமரின் அறிவிப்பானது சிறீலங்காவின் குறுகிய, விடாப்பிடியான, கடும் போக்கை வெளிக்காட்டுகின்றது எனச்சுட்டிக்காட்டியது.

'உலகம் பூராவும் களைப்பில்லாது பயணம் செய்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக செயற்படுமாறு சர்வதேச சமூகத்தை 'வேண்டிவரும்' கதிர்காமர் இலங்கைத்தீவில் விரிவடையும் போரையும் வன்முறையையும் முடிவுக்குக்கொண்டுவர உலக சமூகத்தின் ஆதரவைநாட தயங்குவது ஆச்சரியம் தருகின்றது. தமிழரின் தேச விடுதலைக்கான போரை 'பயங்கரவாதம்' எனவும் அதன் இறைமை என்ற கோட்பாட்டை புனிதமானது – மீறப்படமுடியாதது என்ற காரணத்தை காட்டியும் கதிர்காமர் இராஜதந்திர ஏமாற்றுவித்தை காட்டி தமிழ் மக்கள் மீது ஏவிவிடப்பட்ட இனப்படுகொலையையும் பாரிய மனிதாபிமான அவலங்களையும் மறைக்கப்பார்க்கின்றார். சர்வதேச சமூகத்தின் உதவிகளை நிராகரித்ததன் மூலம் கதிர்காமர், அமைதி முயற்சிகளுக்கு மீளமைக்க முடியாத சேதத்தை ஏற்படுத்தி போரிடும் தமிழ்–சிங்கள தேசங்களுக்கு இடையேயான பிழவை மேலும் ஆழப்படுத்தியுள்ளார்.' என தலைமைப் பணிமனை அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் இவ் அறிவிப்பானது உலகளாவிய செய்தி ஊடகங்களின் ஊடாக வெளியிடப்பட்டுள்ளது. இவ் அறிக்கை தொடர்பாக சிங்கள அரசும் அதனது வெளிவிவகார அமைச்சும் எதுவித அறிவிப்புகளையும் வெளியிடவில்லை. ஐ.நா தலையீடு தொடர்பான சிங்கள நாட்டின் கடும் எதிர்ப்பு இராணுவ வழிமுறைகள் மூலம் தமிழர்களின் தேசிய விடுதலைப் போரை நசுக்கிவிடும் அதன் பொதுநோக்கை வெளிப்படுத்தியுள்ளது.

எமது தேசியத் தலைவர் கடந்த ஆண்டு மாவீரர் நாள் செய்தியில், சர்வதேச மத்தியத்துவம் தொடர்பான தமிழர்களின் நிலைப்பாட்டை பிரகடனப்படுத்தியிருந்தார்.

■ ■ ■

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

ஐக்கிய நாடுகள் சபை உட்பட எந்த ஒரு மூன்றாம் தரப்பு மத்தியத்துவமும் இலங்கைத்தீவின் தேசிய இனங்களின் முரண்பாட்டுத் தீர்வுக்குத் தேவையில்லை என சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் நியூயோர்க்கில் வைத்து ஐக்கிய நாடுகள் சபை தொடர்பாளர்களுக்கு கருத்து வெளியிட்டுள்ளார். அதிலும் குறிப்பாக ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணையாளர் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவனங்களை நுளம்புத் தொல்லையைப் போக்குதல் மலேரியாக் காய்ச்சலை கட்டுப்படுத்தல் போன்ற பணிகளைச் செய்யவே அதிகாரம் உள்ள நிறுவனங்களாக எள்ளி நகையாடியும் உள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோவ்பி அனன் மனித உரிமைகள் பெருமளவிலும் திட்டமிட்ட வகையிலும் எங்கு மீறப்பட்டாலும் அதனைக் கண்காணிப்பதுடன் நிற்காது அவற்றை யார் எப்போது எந்தச் செயற்பாடுகள் மூலம் மாற்றியமைக்கலாம் என்றும் ஐக்கிய நாடுகள் சபை தீர்மானிக்க வேண்டும் என்ற கருத்தை இறைமையின் இரண்டு கோட்பாடுகள் என்ற கட்டுரையில் வெளியிட்டார். இதனையடுத்து குழந்தைகள் அதிகமாகப் பாதிப்படையும் இடங்களில் ஐக்கிய நாடுகள் சபை தலையீடு செய்வதன் அவசியம் குறித்தும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோவ்பி அனன் வலியுறுத்தி அறிக்கை வெளியிட்டார். இவைகள் ஐக்கிய நாடுகள் சபை ஒரு நாட்டின் இறைமையை விட மனித உரிமைகள், மனித சுதந்திரம் என்பவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்க முயற்சிப்பதை எடுத்துக் காட்டுகின்றன. கொசோவோ, கிழக்குத் தீமோர் மக்கள் ஆகியோருக்கு நியாயம் கிடைப்பதில் சமீபத்தில் இடம்பெற்ற நடவடிக்கைகளும் இறைமையை மீறி பாதிப்புற்ற மக்களுக்கு உதவும் நிலை வளர்ந்து வருவதற்கு உதாரணங்களாகியுள்ளன. மனித உரிமை வன்முறைகளில் உலகில் இரண்டாவது இடத்தை பெற்றுள்ள சிறிலங்கா அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சரான லக்ஸ்மன் கதிர்காமருக்கு, ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை, மனிதச் சுதந்திரம் என்பவற்றை ஒரு நாட்டின் இறைமைக்கும் மேலானதாக கருதுவது பெரும் கலக்கத்தை உண்டு பண்ணியதில் எவ்வித வியப்புமில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களை உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாக அவர் ஓலம் எழுப்பி அவற்றின் கடமைப் பரப்பை, பொறுப்பை மறுப்பதினால் சிறிலங்காவில் அவை சுயமாகத் தங்கள் பணிகளைச் செய்யும் உரிமையையும் தாக்கியுள்ளார்.

அவருடைய கலக்கத்தை வலுவடையச் செய்யக் கூடிய முறையில் ஹொங்கொங்கில் தலைமைப் பீடத்தைக் கொண்டுள்ள ஆசிய மனித உரிமை ஆணையம் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடு இல்லாத அமைதிப் பேச்சுக்கள் வெற்றுப்பேச்சுக்களாகவே அமையும் எனக் கூறியிருக்கிறது. இந்த அமைப்பு சிறீலங்காவின் பாதுகாப்பு செலவீனங்கள் அதனுடைய மொத்த வரவு செலவுத் திட்டத்தில் மூன்றில் ஒன்றுக்கும் மேலானதாக அதிகரித்துள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ளது. அத்துடன் சிறீலங்கா சேனையினால் இயக்கப்படும் குண்டுகள் இலத்திரனிக் பொறிமுறைகள் கொண்ட யுத்தக்கருவிகள் உட்பட உயர் தொழில் நுட்ப ஆயுதங்களையும் இராணுவத் தளபாடங்களையும் கொள்வனவு செய்வதற்காக வெளிநாட்டுக் கம்பெனிகளை வழங்கலாளர்களாக பதியுமாறு அழைப்பு யுத்தத்தினை பெரிதாக்கி விடும் எனக் கூறியுள்ளது. உயர் தொழில் நுட்பங்களை யுத்தத்தில் பயன்படுத்துவது ஆக்கிரமிப்பு நிலையையே மேலும் மேலும் வளர்த்து அழிவுகளையும் பதற்றமான சூழ்நிலைகளையுமே தோற்றுவிக்கும் எனத் தெரிவித்துள்ளது. மேலும் இந்தியாவும் பாக்கிஸ்தானும் அணுவாயுதங்களைக் கொண்டு இருக்கும் நிலையில் இத்தகைய சூழ்நிலைகள் வலுப்பெறுவது நல்லதல்ல எனவும் கூறியுள்ள இவ்வமைப்பு சுருக்கமாக கூறுவதானால் எந்த நியாயமான அமைதித்தீர்வுக்கான முயற்சிகளுக்கும் ஐ.நா.வின் தலையீடு அவசியம் என வலியுறுத்தியுள்ளது. வேறுவிதமாக கூறுவதானால் கதிர்காமர் உள்நாட்டுப் பிரச்சினை எனக் கூறுவதை ஆசிய மனித உரிமை ஆணையம் உட்பட பல சர்வதேச நிறுவனங்கள் பகிரங்கமாக மறுத்து மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்தைக் கோருவது கதிர்காமருடைய சர்வதேச பரப்புரைகளின் போலித்தனத்தைப் படம் பிடித்துக்காட்டுகின்றன. இதனால் கதிர்காமரும் சிறீலங்கா அரசாங்கமும் இவை குறித்து கலக்கமடைவது இயல்பானதே.

கலக்கமா? மயக்கமா?

ஆனால் எந்தக் கதிர்காமர் சர்வதேச நாடுகளை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் தமக்கு உதவும்படி கோரிவருகின்றாரோ அதே கதிர்காமர் சர்வதேச நாடுகளும் அமைப்புக்களும் நாட்டில் அமைதியையும் வன்முறைகளையும் நிறுத்த உதவும் சமாதான முயற்சிகளில் மட்டும் தலையிடக் கூடாது என்பது உலகிற்குப் பெரும் மயக்கத்தைக் கொடுத்துள்ளது. இதன் மூலம் அவர் சிறீலங்கா இராணுவம் தமிழர்களுக்குமேல் நடாத்தும் ஆக்கிரமிப்பு யுத்தத்தில் வெற்றி பெறுவதற்காகவே உலக நாடுகளையும் அமைப்புக்களையும் பயன்படுத்துகின்றார் என்பது தெட்டத் தெளிவாகியுள்ளது. இதனால் தான் சிறீலங்காவுக்கு உலக நாடுகள் அளிக்கும் எல்லாவிதமான உதவிகளும் சிறீலங்காவின் இராணுவ நலன்களுக்கு உதவி அதனுடைய தமிழ் இன அழிப்புக்கு துணை செய்கின்றன எனப் புலம்பெயர் தமிழர்கள் கூறி சிறீலங்காவுக்கு அளிக்கும் எல்லாவித ஆயுத உதவிகளையும் பயிற்சிகளையும் பண உதவிகளையும் மறுபரிசீலனை செய்யும்படி புலம்பெயர் தமிழர்கள் உலக நாடுகளை வேண்டி வருகின்றனர்.

கதிர்காமர் மூன்றாம் தரப்பு மத்தியத்துவம் என்பதைக் குறித்து கலக்கம் மயக்கம் அடைந்த போதிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் மிகத் தெளிவாக மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்தை வலியுறுத்தி அறிக்கை பொன்றை வெளியிட்டுள்ளனர். பகைமையும் சந்தேகங்களும் உள்ள சூழ்நிலையில் மூன்றாம் தரப்பு மத்தியத்துவம் மூலமே அமைதித் தீர்வுக்கான முயற்சிகள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசாங்கத்திற்குமிடை தொடரமுடியும் என்பதை வலியுறுத்திய விடுதலைப் புலிகள் கதிர்காமரின் கூற்று சிறீலங்காவின் குறுகிய தொடர்புகொள்ள விருப்பற்ற தீர்வுதேடுவதில் அக்கறையற்ற போக்கையே பிரதிபலிக்கிறது எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேவேளை சமீபத்தில் வன்னிக்கு சென்றுவந்த கத்தோலிக்க ஆயர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் பலத்துடனேயே அமைதி வழித் தீர்வுக்கான மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்தையும் கோருகின்றனர் எனத் தெளிவாக எடுத்து இயம்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தமிழீழ விடுதலைப் புலிகள் இவ்வாண்டை போரெழுச்சி ஆண்டாகப் பிரகடனப்படுத்தியமை தமிழீழ மக்களிடை குறிப்பாக வன்னி மக்களிடை பேரெழுச்சியைத் தோற்றுவித்துள்ளது. இதனால் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கான ஆளணித் தேவைகள் என்றுமில்லாத அளவுக்கு பலமடைந்துள்ளன. அதே நேரத்தில் புலம் பெயர் தமிழர்கள் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் பொருண்மியத் தேவைகளை நிறைவு செய்வதில் காட்டிவரும் அக்கறை தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு மேலும் அணிசேர்த்து வருகிறது. இந்நிலையில் எல்லா வகையிலும் பலமான நிலையிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைதி வழித் தீர்வில் காட்டி வரும் அக்கறை சிறீலங்கா தமிழீழ விடுதலைப் புலிகளைக் குறித்து செய்துவந்த உண்மைக்கு மாறான சர்வதேச பரப்புரைகளின் போலித்தனத்தை உலகிற்கு நன்கு தெளிவாக்கியுள்ளது.

இந்நிலையில் புலம்பெயர் மக்களாகிய நாம் சிறீலங்காவினதும் கதிர்காமரினதும் கலக்கங்களின் மயக்கங்களின் உண்மை நிலைகளையும் நம் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுதியையும் தெளிவையும் உலகிற்கு எடுத்துவிளக்கி மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்திறூடான அமைதித் தீர்வொன்றின் தேவையை உலகு உணரச்செய்தல் வேண்டும்.

AUSTRALIA TCC P O Box 375, Preston, Victoria 3072.	CANADA WTM 84 Eaton Avenue, Toronto, Ontario M4J 2Z5.	DENMARK LTTE P O Box 47, 7400 Herning	FRANCE TCC 341 Rue Des Pyrenees, 75020 Paris.	GERMANY TCG Postfach 340251, 51624 Gummersbach	ITALY TCC Via Vincenzo Di Pavia No14, 90138 Palermo.
NETHERLANDS TCC P.O Box 18600, 2502 EP Den Haag.	NORWAY TCC P.O BOX 1699 Vika, 0110 Oslo.	SWITZERLAND WTTC Joses Str - 110, 8005 Zurich.	SWEDEN TCC Glomminge Grand 25, 3rd Floor, 16362 Spanga	UNITED KINGDOM UTO Eelam House, 202 Long Lane, London SE1 4QB.	U.S.A W.T.C.C. 170-10 Cedarcroft Road Suite 1-L, Jamaica New York 11432.

பொன்விழா இராணுவத்தின் மாறும் உத்திகள்

சிங்கள இராணுவம் தனது பொன்விழாவை கொழும்பில் கொண்டாடுகின்றது. தமது ஆயுத தளபாட பலத்தை வெளிக்காட்டி தமிழர்களுக்கு எதிரான போரில் சிங்களம் படைக்கும் சாதனைகளை சொல்லும் சந்தர்ப்பமாக இதனை இராணுவம் பயன்படுத்துகின்றது. கொடிய மனித வதை மற்றும் படுகொலை நடவடிக்கைகளை மேற்கொண்டு தமிழ் மக்களின் உரிமைகளை பறிக்கும் கொடூர யுத்தத்தில் ஈடுபட்டுள்ள சிங்கள இராணுவமானது அடுத்த ஆண்டில் உயர் தொழில் நுட்ப ஆயுத தளவாடங்களுடன் பெரும் இனப்படுகொலைக்குத் தயாராகி வருகின்றமையை அண்மைய நிகழ்வுகள் புலப்படுத்துகின்றன. அதிகரிக்கப்பட்ட நிதியும் கொள்வனவு செய்யப்படும் பெரும் நவீனரக ஆயுத தளபாடங்களும் அடுத்த ஆண்டிற்கான சிங்கள நிகழ்ச்சித் திட்டத்தை வெளிக்காட்டும் சேதிகள் ஆகும்.

இரு பெரும் தேர்தல்களை எதிர்கொள்ள வேண்டிய சிங்கள அரசியல் தலைமைகளின் தேவைகளை ஒரு புறமும் வெறியூட்டப்பட்ட சிங்கள பேரினவாத இயந்திரத்தின் பேராதரவை மறுபுறமும் கொண்டு ஒரு திட்டமிடப்பட்ட இராணுவ சூத்திரத்தை சிங்களம் வகுத்து வருவதை அண்மைக்கால நிகழ்வுகள் புலப்படுத்துகின்றன.

இன்று தீவிர போரிற்கான அரசியல் - இராஜதந்திர தயாரிப்புக்களில் சிறீலங்கா நுட்பமான அணுகுமுறையை வெளிக்காட்டி வருகின்றது.

அரசியல் முனையில் தமிழர்களுக்கெதிரான தொடர்ச்சியான போரின் தேவையை வலியுறுத்தும் அரசியல் சமூக இயக்கங்கள் தூண்டிவிடப்பட்டு வருகின்றன. வீரவிதான போன்ற சிங்

கள பௌத்த பேரினவாத அமைப்புக்கள் போரின் தேவையையும் அதற்கான ஆதரவையும் வலியுறுத்தி வருவன. சந்திரிகா அரசின் இரகசிய ஆதங்கங்களை வெளிப்படையாக மக்களிடம் கொண்டு செல்லும் தன்னார்வ அமைப்புக்களாக உருவாகும் இவை ஒரு பெரும் இராணுவத்திட்டத்தில் ஒரு பாத்திரத்தை வகிக்கின்றன. தமிழீழ சிறீலங்கா எல்லை புறத்தில் இனவாதத் தீயை உக்கிரமாக இவை எரியவிடுகின்றன. அம்பாறையை விட்டு தமிழர்களை ஓடுமாறு இவை துண்டுபிரசுரம் வெளியிடுகின்றனர்.

உள்நாட்டில் கொழுந்துவிட்டெரியும் இனவெறி தீயை மறைத்து போரிற்கான சர்வதேச ஆதரவையும் அங்கீகாரத்தையும் பெற உழைக்கும் சந்திரிகா அரசு தமது ஆட்சியின் இறுதிக் கட்டத்தில் இதுவரை உச்சரித்த சர்வதேச மொழியை மாற்றி போரை தொடர்வதற்கான தமது தீவிர நிலைப்பாட்டை வெளிக்காட்டி வருகின்றனர். சர்வதேச மத்தியத்துவத்தை நிராகரித்ததும் பேச்சுக்களுக்கான பிரதான எதிர்கட்சியின் கோரிக்கையைக் கூட எதிர்ப்பதும் இம்மொழி மாற்றத்தின் வெளிப்பாடாகும். இன்றைய சூழ்நிலையில் பேச்சுக்கள் நடாத்தப்பட முடியாதன என பிபிசி செய்தி நிறுவனத்திற்கு கதிர்காமர் அளித்த பேட்டி போரை தீவிரமாக தொடர்வதற்கான முன்னெச்சரிக்கையாகும்.

அடுத்த கட்ட போர் நடவடிக்கைகள் எவ்வாறு அமையும் என்பற்கு சிங்கள அரசு வெளியிட்டுள்ள இராணுவத் தளபாட உத்தரவு பட்டியல் சான்றாகும். குறித்த இலக்கில் பெரும் சேதாரத்தை ஏற்படுத்தக் கூடிய குண்டுகளை தேர்வு செய்வதன் வாயிலாக போரை உயர் தொழில் நுட்ப எல்லைக்கு கொண்டு செல்ல இராணுவம் முனைகின்றது. சர்வதேச இராணுவக் கல்லூரிகளில் தாம் கற்ற பேரழிவை ஏற்படுத்துவதற்கான நுட்பங்களை சிங்களத் தளபதிகள் மக்கள் மீது பிரயோகிப்பதற்கான தயாரிப்புக்கள் தூண்டிவிடப்பட்டுள்ளன. மன்னாரில் அமெரிக்க பயிற்சி பெற்ற தளபதியின் தரைப்போர் உத்தி மீது பெரும் அடி வீழ்ந்த போது புதுக்குடியிருப்பை வான் மார்க்கமாகத் தாக்கி மக்களை அழித்தமை அடுத்த ஆண்டிற்கான உயர் தொழில் நுட்ப போரின் உதாரணமாகும்.

— நாதன் —

இனப்படுகொலைக்கான சந்திரிகாவின் சமிக்ஞை 2000 ஆண்டில் 5243 கோடி இராணுவ செலவீனம்?!

சந்திரிகா அரசு அடுத்த ஆண்டிற்கான தன் இராணுவச் செலவீனத்தை மேலும் பாரிய அளவில் அதிகரிக்க உள்ளதாக அறிவித்துள்ளது. அடுத்த ஆண்டுக்கான நிதி திட்டத்தின் முன் அறிக்கையை சிறீலங்கா பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள அரசு தன் இராணுவச் செலவீனத்தை மேலும் 11.7 வீதம் அதிகரித்து போரிற்கான முன்னுரிமையை வெளிக்காட்டியுள்ளது.

அடுத்த ஆண்டில் இராணுவத்திற்கான நிதி ஒதுக்கீடாக 5243 கோடி 42 இலட்சத்து 71 ஆயிரம் ரூபாயை ஒதுக்கியுள்ள சந்திரிகா அரசு இவ் ஒதுக்கீட்டில் தரைப்படைக்கு 2359 கோடியையும் பொலிஸ்படைக்கு 1045 கோடியையும் கடற்படைக்கு 832 கோடியையும் விமானப்படைக்கு 829 கோடியையும் வழங்கியுள்ளது.

இவ் முதலறிக்கையில் ஒதுக்கப்படும் நிதியிலும் 20 முதல் 25 வீதம் அதிகமாக செலவிடுவதை சிறீலங்கா அரசு வழக்கமாகக் கொண்டது என இவ் ஒதுக்கீடு தொடர்பாக செய்தி வெளியிட்டுள்ள சர்வதேச செய்தி நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. மேலும் அடுத்த ஆண்டிற்கான அரசின் செலவீனம் இவ்வாண்டு செலவீடு செய்யப்பட தீர்மானிக்கப்பட்ட 339 பில்லியன்களிலும் குறைவாக 291 பில்லியன் ரூபாய்களாக இருப்பினும் போரிற்கான நிதியை சந்திரிகா அதிகரித்துள்ளார்.

அடுத்த ஆண்டு சிங்கள நாடானது தேர்தல்களை சந்திக்க உள்ள நிலையில் போரிற்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரித்ததன் மூலம் போரையே தனது பிரதான இலக்காகக் கொண்டு தன் அதிகாரத்தை சிங்கள மக்களிடம் தக்கவைக்க சந்திரிகா அரசு முயல்வது வெளிப்படையாக்கப்பட்டுள்ளது.

தன் விமானப் படைக்கு அதி நவீனரக குண்டுவீசும் ஆற்றலை அதிகரிக்கும் முயற்சிகளையும் கடற்படையினை நவீன மயப்படுத்தும் திட்டங்களையும் அண்மைக்காலமாக அமுல்படுத்தும் சிறீலங்கா அரசு போர்முனையில் ஏற்படும் தோல்விகளை ஈடுசெய்ய மோசமான – பாரிய இனஅழிப்பு முயற்சிகளில் ஈடுபடலாம் என்பதை புதுக்குடியிருப்புக் குண்டு வீச்சு நிரூபிக்கின்றது.

சிங்கள அரசு புதிய நிதிஒதுக்கீட்டு அறிக்கை மூலம் பேரினவாத இராணுவத் தலைமைக்கு போரை தீவிரமாகத் தொடர்வதற்கான சமிக்ஞையை வழங்கியுள்ளது. இது சிங்கள இனவாத அமைப்புக்கள் என பகிரங்கமாக விமர்சிக்கப்பட்ட வீரவிதான, பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய இயக்கம் போன்றவை முன்வைத்து பரப்புரை செய்த கோரிக்கையும் ஆகும். போர் மூலம் மட்டுமே தமிழர்களின் அரசியல், இராணுவ பலத்தை சிதைக்கலாம் என்ற சிங்களப் பேரினவாத சிந்தனைகளை, தொடர்ச்சியாக அதிகரிக்கும் இராணுவச் செலவீனம் மூலம் சந்திரிகா நிரூபித்துள்ளார்.

புதிய நூற்றாண்டை தமிழ் மக்களுக்கு எதிரான போராண்டாக பிரகடனம் செய்யும் சந்திரிகா அரசு இதனால் சிங்களத்திற்கு ஏற்படும் பொருளாதார சிதைவை மறைப்பதற்கு ஏற்புடைய அரசியல் பேரினவாத கருத்து பரவலை சமீப காலமாக தீவிரப்படுத்தி வருகின்றது. சந்திரிகாவின் இனவாத மேற்கோள்களான 'வந்தேறுகுடிகள்' போன்றவையும் அம்பாறை சம்பவத்தினை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட அரசியல் நாடகங்களும், அரச ஆதரவு பெற்ற இனவாத இயக்கங்களின் வித்தைகளும் இக் கருத்துப் பரப்பும் செயற்பாடுகளின் புறவடிவங்களாகும்.

எனினும் சிங்கள பொருளாதாரம் சிதைக்கப்பட்டு வருகின்றது என்ற உண்மை தமிழர்களின் தேசிய விடுதலைப் போரிற்கு பலமூட்டும் செய்தியாகும். ஏற்றுமதி வீழ்ச்சியும் உல்லாசப் பயணிகளின் வருகைக் குறைப்பும் சிறீலங்கா பொருளாதாரத்தை மோசமாகப் பாதிப்பதை மத்திய வங்கி அதன் சமீபத்தைய அறிக்கையில் ஒப்புக்கொள்கின்றது.

ஆட்பல அதிகரிப்பின் அவசியமும் பொருண்மியத் தேவைகளின் பெருக்கமும்

வன்னியில் நடைபெறும் மரபுப்போர் ஒரு புதிய கட்டத்திற்குள் சென்றுகொண்டிருக்கின்றது.

தமிழரின் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காணும் இலக்கில், சந்திரிகா அரசாங்கம் புதியதொரு போர்த்திட்டத்தை வன்னிப் போர்க்களத்தில் அரங்கேற்றியுள்ளது.

புலிகளின் பலமான பகுதிகளுக்குள் ஊடுருவிச் சென்று புலிப்படையின் மரபுப்போர் ஆற்றலை நசுக்க சிங்களப்படைகள் எடுத்த முன்னைய முயற்சி தோல்வியில் முடிந்துவிட்டது. ஜெயசிக்குறுயின் தோல்வியுடன் அந்தப் போர்த்திட்டம் மாற்றப்பட்டுவிட்டது.

இப்போது எதிர்ச்சமரை புலிகள் நடத்தாத இடங்களை இனங்கண்டு அவற்றை அரச படைகள் கையகப் படுத்துகின்றன.

படையினரின் இப்புதிய போர்த்திட்டத்திற்கு இரண்டு பிரதான நோக்கங்கள் இருக்கின்றன.

ஒன்று, நிலங்களைக் கைப்பற்றி அதை அரசாங்கத்தின் அரசியல் (தேர்தல்) வெற்றியாக்குவது.

இரண்டு, சமர்அரங்கை நீட்டி- விரித்து புலிகளின் பலத்தை ஐதாக்கி மரபுப்போரில் சிங்களப்படைக்கு சாதகமான புறநிலையை ஏற்படுத்துவது.

இறுதியில் புலிகளின் பலமான பகுதிகளைக் குறிவைத்து ஒரு தீவிரமான மரபுச்சமரை - பலமுனைகளூடாக நடாத்துவது படைத்தலைமையின் திட்டம்.

அரசபடைகளின் இந்த ஆக்கிரமிப்புத் தந்திரோபாயத்திற்கு புலிகளிடமுள்ள ஆட்பற்றாக்குறை ஒரு அடிப்படைக் காரணியாக உள்ளது.

இந்த நிலையில், அரசபடைகள் விரிவாக்கிக் கொண்டு வரும் களமுனைகளில் காட்டமானவகையில் எதிர்ச்சமர் புரிவதற்கேற்ற மேலதிக ஆளணியை அவசரமாகப் பெற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம், புலிகள் இயக்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

இந்த ஆட்தேவையை வழங்கி - புலிகளின் இராணுவ பலத்தை உயர்த்த வேண்டிய வரலாற்றுக் கடமை எமது மக்களிடமே உள்ளது.

இதேவேளை, வன்னிச்சமர் நாளுக்குநாள் விரிவாக்கம் கண்டுவருவதனால், சிங்கள அரசு மேலும் - மேலும் தனது பொருண்மிய வளத்தை போருக்காக செலவிட்டுக் கொண்டிருக்கின்றது.

தனது பொருளாதாரபலத்தைப் போருக்குத் திருப்பிவிடும் கைங்கரியத்தைச் செய்யும் அதேவேளை, அத்தகைய பொருளாதார பலம் புலிகள் இயக்கத்திற்கு போய்ச்சேராமல் தடுப்பதிலும் அரசாங்கம் அக்கறை காட்டுகின்றது.

புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி மீது அரசாங்கம் விதித்துள்ள பெருண்மியத்தடைகளுடன், அங்கே எந்த ஒரு உற்பத்தி நடவடிக்கையும் நடைபெறாவண்ணம் உள்ளீட்டுப்பொருட்களுக்கு - உபகரணங்களுக்கு - மூலப்பொருட்களுக்கு அது தடைவிதித்துள்ளது. இதன் மூலம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் பொருண்மிய வளர்ச்சிகள் ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்வதில் அரசு கவனமாக உள்ளது.

நில ஆக்கிரமிப்பிற்கு அப்பால், இராணுவ நடவடிக்கைகளின்போது படையினர் கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதல்களை நடாத்தி - மக்களை குடிபெயழப்பிக் கலைத்து அவர்களின் குடும்ப பொருளாதாரத்தைச் சிதைத்துவருகின்றனர். போராடும் மக்களின் குடும்பப் பொருளாதாரத்தைச் சிதைப்பதன்மூலம் போராட்டத்திற்குத் தேவையான பொருண்மிய பலத்தை இல்லாது செய்யும் சதிச்செயலையும் சிங்கள அரசு செய்துவருகின்றது.

இவற்றுடன் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பாரிய இடப்பெயர்வுகளை ஏற்படுத்தி - அந்த அகதிப் பாரத்தை புலிகள் இயக்கத்தின் மீது சுமத்திவிடும் வேலையையும் சிங்கள அரசு திட்டமிட்டுச்செய்கின்றது. ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையின்போதும் அல்லது படைத்தளங்களில் இருந்து குடியிருப்புக்கள்மீது

Liberation Tigers Of TAMIL EELAM

புலிகளின் குரல்

வீசப்படும் எறிகணைத் தாக்குதல்களின்போதும் உயிர் காப்பிற்காக பல்லாயிரம் மக்கள் இடம்பெயரும் அவலம் நடக்கின்றது. இடம்பெயர்வாளர்களின் உடனடித் தேவைகளுக்கு, பெரும்பாலும் புலிகளின் பொருண்மிய வளம்பயன்படுத்தப்படுகின்றது. போருக்கென ஒதுக்கப்பட்டிருக்கின்ற வளத்தில் ஒரு பகுதி இடம்பெயர்ந்தோரின் பராமரிப்பிற்கென கரைவது புலிகளின் போர்ப் பொருளாதாரத்தில் தாக்கங்களை ஏற்படுத்தும் என்று அரசாங்கம் நம்புகின்றது.

இவ்விதம் சிங்கள அரசு திட்டமிட்டுச் செய்யும் பொருண்மிய நாசங்களுக்கு மத்தியில், போராட்டத்திற்கான பொருளாதாரத் தேவையும் பெருகிச்செல்கின்றது.

மரபுப்போரின் தீவிரம் காரணமாக படையினருக்கு இணையாக புலிகளும் படைக்கலங்களை பயன்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்துள்ளது. படையினரின் படை நகர்வைத் தடுத்து நிறுத்த பெருமெடுப்பில் புலிகள் எறிகணைகளைப் பயன்படுத்துகின்றனர். படைகளின் ராங்க் நகர்வுகளைக் கட்டுப்படுத்தி - நில ஆக்கிரமிப்பைத் தடுக்க பெறுமதிவாய்ந்த ராங்க் எதிர்ப்பு ஆயுதங்கள் உபயோகிக்கப்படுகின்றன. பெரும் செலவில் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. பல்லாயிரக்கணக்கான போராளிகளின் உணவு, உடை, மருத்துவ தேவைகளை ஈடுசெய்ய, மாதாந்தம் பலகோடி ரூபாய்கள் செலவாகின்றன. ஆயிரக்கணக்கான புதிய போராளிகளுக்கு பயிற்சி கொடுத்து போருக்குத் தயார்ப்படுத்த பெருமளவு நிதி தேவைப்படுகின்றது.

போராட்டத்திற்குத் தேவையான இந்த பொருண்மிய வளத்தை நல்கவேண்டிய வரலாற்றுக் கடமை எமது மக்களுக்குத்தான் உண்டு. இந்தத் தேசியக்கடமையை செய்யக்கூடிய நிலையில் தாயகத்தில் வதியும் எமது மக்கள் இல்லை என்பது அனைவரும் ஒப்புக்கொள்கின்ற விடயம். இந்தப் பொருண்மிய பலத்தை புலம்பெயர்ந்து வாழும் எமது மக்களே புலிகள் இயக்கத்திற்கு வழங்க முடியும். இந்த சக்தி புலம்பெயர்ந்த ஈழத்தவர்களுக்கு உண்டு.

புலம்பெயர்ந்த தமிழீழ மக்களை நோக்கி தலைவர் பிரபாகரன் அண்மையில் விடுத்த செய்தியில் போராட்டத்திற்கான பொருண்மியத் தேவையின் அவசியம் பற்றி வலியுறுத்தி இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உலக விடுதலைப் போராட்ட வரலாறுகளில் புலம்பெயர்ந்த அந்த இன மக்களின் பொருண்மியப் பங்களிப்பு மிக முக்கிய இடத்தை வகித்திருப்பதைக் காண முடியும். புலம்பெயர்ந்த எமது மக்களின் பொருண்மியப் பங்களிப்பு அண்மைக்காலங்களில் பெருகியிருப்பது மகிழ்ச்சிதரும் செய்தி எனினும், தீவிரம் பெற்று வரும் இன்றைய போரின் தேவைகளுக்கு ஏற்றவகையில், இது மேலும் - மேலும் பல்கிப்பெருகி பெருக வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

இன்றைய நிலையில், தமிழர் சேனையான புலிப்படையின் ஆட்தொகை அதிகரிப்பும் - போராட்டத்திற்கான பொருண்மிய உதவிகளின் பெருக்கமும்தான் சிங்களப்படைகளுடனான போரின் தலைவிதியைத் தீர்மானிக்கும் முக்கிய விடயங்களாக இருக்கின்றன.

போருக்கு வேண்டிய பொருண்மியத் தேவைகளை ஈடுகட்டவேண்டிய வரலாற்றுக் கடமை புலம்பெயர்ந்த ஈழத்தவர்களுக்கு உள்ளது போல, போரிற்குவேண்டிய அதிகரித்த ஆட்தேவையை நிவர்த்தி செய்யவேண்டிய தட்டிக்கழிக்க முடியாத வரலாற்றுக் கடமை தாயகத்தில் வாழும் இளைஞர் - இளம் பெண்களுக்கே உள்ளது.

தேசம் நெருக்கடிகளைச் சந்திக்கும் வேளைகளில் தத்தமது தேசியக் கடமைகளை சரிவரச் செய்ய முன்வரும் மக்கள் இனம், நெருக்கடிகளை வென்று வரலாறு படைக்கும் என்பது மானிட வரலாறு கூறும் உண்மை.

> போராட்டத்திற்குத் தேவையான இந்த பொருண்மிய வளத்தை நல்கவேண்டிய வரலாற்றுக் கடமை எமது மக்களுக்குத்தான் உண்டு. இந்தத் தேசியக்கடமையை செய்யக்கூடிய நிலையில் தாயகத்தில் வதியும் எமது மக்கள் இல்லை என்பது அனைவரும் ஒப்புக்கொள்கின்ற விடயம். இந்தப் பொருண்மிய பலத்தை புலம்பெயர்ந்து வாழும் எமது மக்களே புலிகள் இயக்கத்திற்கு வழங்க முடியும். இந்த சக்தி புலம்பெயர்ந்த ஈழத்தவர்களுக்கு உண்டு.

தெருத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு...

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட திருகோணமலை நகர அபிவிருத்தித்திட்ட வேலைகள், சிறீலங்கா அரசால் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளன. திருகோணமலை நகர அபிவிருத்திக்கென [illegible] ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், தற்போது அந்தப் பணத்தைக்கொண்டு, சிங்களப்பகுதிகளையும், சிங்களக் குடியேற்றக் கிராமங்களையும் பலப்படுத்தவும், அபிவிருத்தி செய்யவும் சிறீலங்கா அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக அறியப்படுகின்றது. தமிழர் நகரின் அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட பணம், திருகோணமலையில், சிங்கள ஆக்கிரமிப்பின் விருத்திக்காக பயன்படுத்தப்படவிருக்கின்றது. o

தமிழர் பூமியில் நீருக்குக்கூட தடையா..?

மட்டக்களப்பு மாவட்டத்தில், அம்பாறை எல்லைப் பகுதியில் உள்ள உறுகாமம் குளத்திற்குவரும் ஆற்றுநீரை வழிமறிக்க திட்டமிட்டுள்ளது சிங்கள அரசு. உறுகாமம் குளத்திற்குச் செல்லும் முந்தெனி ஆற்றை திசைதிருப்பி, அம்பாறையில் மூன்று நீர்த்தேக்கங்களை அமைக்கவும், இதன்மூலம் அம்பாறை மாவட்டத்தில், சிங்கள விவசாயிகளுக்கு நீர்வழங்க சிங்கள அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தமிழீழ உருவாக்கத்திற்கு சிங்களத்தின் ஒத்துழைப்பு (?) !

ஓயாமல் அலையும் கதிர்காமர் !

இலங்கைத்தீவில் சிங்கள தமிழ் தேசியங்களுக்கிடையிலான பிரச்சினை வெறும் உள்நாட்டுப் பிரச்சினை என்று, நீண்டகாலமாகவே சிறீலங்கா அரசு கூறிவருகின்றது. தமிழின அழிப்பை நிகழ்த்திக்கொண்டு, அதன் இருப்பை அச்சுறுத்திக்கொண்டு, சிங்களத் தலைமைகள், இந்தக் கவச மந்திரத்தை அடிக்கடி உச்சரித்துக் கொள்ளும்.

இனஅழிப்பின் தீவிரம் சற்று அதிகப்படுத்தப்படும்போது, அதற்கெதிரான சர்வதேச கண்டனங்கள், அல்லது அக்கறைகள் சிங்கள அரசை அச்சுறுத்தும்போது சிங்களம் இதை ஓங்கி உச்சரிக்கும்.

இறைமையுள்ள அரசுகள் என்ற அங்கீகாரம் தரும், பாதுகாப்பு இத்தகைய இன அழிப்பை இன ஒடுக்குமுறையை நிகழ்த்துகின்ற சிறீலங்கா போன்ற குறுகிய சிந்தைகொண்ட பேரினவாத அரசுகளிற்கு வாய்ப்பாக அமைந்துவிடுகின்றது.

இலங்கை இனப்பிரச்சினை, உலகின் கவனத்தை மெல்லமெல்ல சென்றடைந்து, இப்பிரச்சினை சர்வதேச மத்தியத்துவத்துடன் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினையே என, உலகம் கருதத் தலைப்பட்டுள்ள இன்றைய நிலையிலும், இது உள்நாட்டுப் பிரச்சினையே என சாதிக்க சிறீலங்கா அரசு பெரும்பாடுபட்டுவருகின்றது.

சிங்கள ஆட்சி, இலங்கைத்தீவில் வாழுகின்ற முழுமக்களிற்கும் பொதுவானது என்ற தோற்றம் உடைந்து, சிங்கள ஆட்சிபீடம் இலங்கைத்தீவில் வாழுகின்ற தமிழ் மக்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கின்றது என்ற உண்மை சிங்களத்தலைமையாலேயே பகிரங்கப்படுத்தபடுகின்ற நிலைமை தற்போது காணப்படுகின்றது. சிங்களத் தலைமை சிங்கள மக்களுக்கானது என்ற உண்மை தற்போது பகிரங்கப்படுத்தப்பட்டிருக்கின்றது.

முல்லைத்தீவில் குண்டுவீசி அப்பாவிப் பொதுமக்களை கொன்றொழித்த சிறீலங்கா அரசு, இந்தக் கொடுமைக்கு கவலை தெரிவிக்கவில்லை. மன்னிப்புக் கோரவில்லை. மாறாக, அது விபத்தாக இருக்கலாம் என, இறுமாந்தபோக்கில் அலட்சியமாய் கூறியது. பாதிக்கப்பட்ட மக்களை கொதிப்புற வைக்கும் போக்கிரித்தனமான காரணங்களையெல்லாம் அது கூறியது. கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கோ காயமடைந்த மக்களுக்கோ நட்டாடு வழங்கவில்லை. காயப்பட்ட மக்களுக்கான வைத்திய ஏற்பாட்டைக்கூடச் செய்யவில்லை.

இதன் எதிர்விளைவாக நடந்தப்பட்டதாக சிறீலங்கா அரசால் கூறப்படும் அம்பாறைச் சம்பவங்களில் பாதிக்கப்பட்ட சிங்களமக்களுக்கு விழுந்தடித்துக் கொண்டு உதவிகள் செய்கின்றது. சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவோ, விசேட பணிப்புகள் வழங்கி, நிவாரணக் கொடுப்பனவுகளுக்கு அவசரமாக ஏற்பாடு செய்தார். புனர்வாழ்வு அமைச்சர் அஸ்ரப்போ நட்டாட்டுத்தொகையை வழங்க உத்தரவிட்டார். விழுந்தடித்துக் கொண்டு விஜயம் செய்த ரத்வத்தையோ இராணுவம், அதிரடிப்படை, பொலிஸ் என்பனவற்றைக் கொண்ட கூட்டுப்பாதுகாப்புக்கு உத்தரவிட்டார்.

ஆக, சிங்களம் பிரிந்து நின்று, தனது மக்களுக்காக ஓய்வில்லாமல் பாடுபட்டுவருகின்றது. அதீதமான கவலைகொண்டு அக்கறையுடன் செயற்படுகின்றது. தமிழ் மக்கள் அந்நிய தேசத்து மக்கள் என்பதை சிங்களம் தனது செய்கைகள் மூலம் நன்கு வெளிப்படுத்துகின்றது. ரணகோச ஐந்தின் தோல்விக்கு பழிவாங்க முல்லைத்தீவில் குண்டு வீசி மக்களைக் கொன்று, மனக் கொதிப்புக்கு வடிகால்தேடி நினைத்தது சிங்களம். ஆனால், அது வேறு ரூபத்தில் எதிர்விசையாகி அதன் மையநிலையை உலுக்கியது. குழம்பிப்போன சிங்களம் ஏதேது செய்கின்றோம் என உணராமல் காரியங்களில் இறங்கியது.

அம்பாறைச் சம்பவம், சிறீலங்கா அரசினால் ஏற்படுத்தப்பட்ட சூழ்நிலையின் எதிர்த்தாக்கம் என்பது சிங்களமக்களாலும், அனைத்துத்தரப்பாலும் உணரப்பட்ட நிலையில், குறைந்தபட்சம் சிங்கள மக்களிடம் இருந்தாவது தன்னைக் காக்க, சிறீலங்கா அரசு பாடுபட்டுவருகின்றது.

சிங்களத்தின் இந்தக் குழப்பத்தில், அதன் உண்மை நிலைப்பாடு வெளிப்பட்டிருப்பதை மறைப்பதற்கில்லை.

ஆக்கிரமித்துக்கொண்ட பகுதிகளாக இருந்தபோதும், தன் எல்லைகளைப் பாதுகாக்க சிங்களம் படாதபாடுபட்டுவருகின்றது. சிங்களம் தானாகவே எல்லை பிரித்துள்ளது. சிறீலங்கா தேசம் தமிழீழ தேசம் என்பவற்றிற்கிடையிலான எல்லைகளைப் பிரித்து, தனது மக்களின் பாதுகாப்புக்குறித்து அக்கறையுடன் செயற்பட்டுவருகின்றது.

தமிழீழமக்களுக்குச் சொந்தமான நிலங்களில் நடத்தப்பட்ட திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு பாதுகாப்பு வழங்கி, தன் தேசத்தின் எல்லையை விஸ்தரித்து, அது நடத்துகின்ற ஆக்கிரமிப்பு நடவடிக்கை, எதிர்காலத்தில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை என்றபோதும், அது தன் எல்லையை வரையறுத்துக் கொள்ளுகின்றது.

இதன்படி, சிங்கள மக்களின் வாழ்விற்கும் வளத்திற்கும், அதன் பாதுகாப்பிற்கும் சிங்களத் தலைமைகள் இருக்கின்றன என்பதும், தமிழ்மக்களின் வாழ்வும் வளமும் பாதுகாப்பும் தமிழ்மக்களாலேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும் நன்கு புலப்பட்டு நிற்கின்றன. அதே வேளை, திட்டமிட்டு சிங்களத்தால் அபகரிக்கப்பட்டுள்ள தமிழீழ நிலங்களை மீட்டு அவற்றை வளம்கொழிக்க வைப்பதும் தமிழீழ மக்களின் கடமையாகின்றது.

இதைத்தான் சிங்களம் எமக்கு உணர்த்துகின்றது.

இந்நிலையில்தான், இலங்கை இனப் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை எனவும், இதில் யாரும் தலையிட வேண்டியதில்லை எனவும் லக்ஸ்மன் கதிர்காமர் அண்மையில் தெரிவித்திருந்தார். உலக நாடுகள் எல்லாம் திரிந்து திரிந்து இது உள்நாட்டுப் பிரச்சினை, இதில் யாரும் தலையிட வேண்டியதில்லை என்று பிதற்றித்திரியவேண்டிய பரிதாபகரமான பாத்திரம் தற்போது கதிர்காமரது.

கன்றுக்குப் புலப்படாமல் உள்ளூறிப் பெருத்து இறுதியில் ஆளையே காவுகொள்ளும் கொடியநோயைக் காவிக்கொண்டு திரிகின்ற நோயாளிபோலவே சிறீலங்கா ஆட்சிபீடம் உள்ளது. இனப்பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை என, கிளிப்பிள்ளைபோல ஒவ்வொரு வெளிநாட்டு அமைச்சர்களும் புதிய புதிய சிங்களத் தலைவர்களும் கூறிக்கொண்டு திரிந்தாலும், இனப்பிரச்சினை எல்லை கடந்த பிரச்சினையாகியுள்ளது. உலக நாடுகள் பல, மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்தை வலியுறுத்தியிருப்பதுடன், மத்தியத்துவம் புரிய தமக்கிருக்கக் கூடிய ஆர்வத்தையும் கடந்த காலங்களில் வெளிப்படுத்தியிருக்கின்றன.

காலத்தின் நெருக்கம், கட்டாயம், மூன்றாம் தரப்பொன்றின் தலையீட்டை, மத்தியத்துவத்தை சிறீலங்கா அரசை ஏற்கக் கட்டாயப்படுத்தும். அல்லது, சிறீலங்கா அரசு விரும்பினாலோ விரும்பாமல் விட்டாலோகூட, தமிழீழ சிறீலங்காப் பிரச்சினையை, சர்வதேச சமூகம் தன் கையில் எடுத்துக்கொண்டு தீர்வுகாண முற்படலாம். உலகப்பரப்பில் அண்மைக் காலங்களாக நிகழ்ந்துவரும் நிகழ்வுகள், இதனை எதிர்வுகூறுகின்றன.

எத்தனை காலத்திற்குத்தான், உண்மையை, பொய்யால் மூடிவைத்திருக்க முடியும்.

சிறீலங்கா அரசின் போக்குகள், தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை அவர்கள் தனது மாவீரர் நாள் உரையில் தெரிவித்த கருத்தை, அப்படியே அங்கீகரிப்பதுபோலவே இருக்கின்றன.

'சிங்களப் பேரினவாதத்தின் கடும் போக்கிலும் தமிழர் விரோதக் கொள்கைகளிலும் அடிப்படை மாற்றம் ஏதாவது நிகழும் என நாம் எதிர்பார்க்கவில்லை. எதிர்காலத்தில் இந்த மாற்றம் நிகழாது போனால் தமிழீழத் தனியரசு உதயமாகும் புறநிலையை உருவாக்கித்தந்த வரலாற்றுப்பெருமை சிங்களப் பேரினவாதத்திற்கே சாரும்.'

தேசியத் தலைவரின் இந்தக் கருத்துக்கு வலுச்சேர்க்கும் போக்கிலேயே சிங்களம் பயணப்படுகின்றது.

சூப்பு

இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் கலவர பதற்றம் ஏக்கர் நெல்வயலைமற்றும், கட்டாந்தரைகளாலும் அபாயம் தோன்றியுள்ளது. தமிழர்களின் பெருவாதார வளத்தை வாழ்வை அழித்து சிங்களமக்களை வாழவைக்க சிங்களஅரசு திட்டமிட்டுள்ளது. உணவை, மருந்தை, அத்தியாவசியப்பொருட்களை, போக்குவரத்தை தடைசெய்த சிங்களஅரசு தமிழர்பூமிக்குச் செல்லும் ஆற்றுநீருக்குக்கூட தடைபோட முற்படுகின்றது ○

தானாடாவிட்டாலும் தன் தசையாடும்...

அம்பாறை மட்டக்களப்பு எல்லைக்கிராமங்களைச் சேர்ந்த முன்னூற்றைம்பது தமிழ்க்குடும்பங்கள் தமது சொந்த இடங்களைவிட்டு, இடம்பெயர்ந்து அயல்க்கிராமங்களில் தஞ்சமடைந்துள்ளன. சிறீலங்கா அரசபடையினராலும், அரசபடையினரால் ஆயுதபாணிகளாக்கப்பட்டு, பயிற்சி வழங்கப்பட்டுள்ள சிங்களக்குடியேற்ற வாசிகளினாலும் ஏற்படக்கூடிய ஆபத்தை உணர்ந்தே அக்குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. தமது சொந்த இடங்களைவிட்டு அவையும் தமிழ்மக்களிற்கு அரசாங்கம் எந்தவித உதவியும் வழங்கவில்லை.

அதேவேளை அம்பாறையில் இருந்து வெளியேறிக்கொண்ட சிங்களக்குடியேற்றவாசிகளுக்கு உலர் உணவு நிவாரணம், மீளக்குடியேறுவதற்கான நிவாரணம், நட்டஈட்டுத்தொகைகள் வழங்கப்படுகின்றன. மீளக்குடியேற விசேட சலுகைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. ஆயுதங்களும் வழங்கி கூடவே பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது. ○

வெறியாட்

ஸ்கந்தபுரம் கரும்புத் தோட்டப்பகுதி. வாய்க்கால் கரையோரத்தில் பச்சையாய் மண்டிய பற்றைக்கருகில் - ஒரு குடும்பம் வாழ்தல் சாத்தியமா என்ற பரிதாபக் கேள்வி எழுப்பும் ஒரு அகதிக்குடிசை அதைக் குடிசை என்பதே அதிகம். உண்மையில் நாங்கள் சின்னஞ்சிறு வயதில் அம்மா -அப்பா விளையாடுவதற்குக் கட்டுகின்ற கொட்டிலைப்போல அது மோசமாக இருக்கிறது. ஆனால் அதற்குள்ளும் ஒரு வாழ்வு நடக்கிறது.

ஒவ்வொரு நாளும் அந்தக் கொட்டிலில் உலை கொதிப்பதில்லை.ஆனால் நாள் தவறாமல் அங்கு வாழும் ஐந்து சீவன்களின் வயிறுகளும் கொதிக்கும் பகலெல்லாம் கபகபவென்று குடலைப்பற்றியெரியும் பசித்தீயை இரவு காச்சுகின்ற கஞ்சியும் - நித்திரையும் தணித்துவிடும். பகலெல்லாம் பற்றியெரியும் கனவுகளோடு பசித்தீக்கங்குகள் நிறுபூக்கும். "இந்த இரவு விடியாமலே இருந்துவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்" அந்தக் குடும்பம் நினைத்தக் கொள்ளும். ஆனால் பகல், இரவையும் - இரவு, பகலையும் தின்னுவதை நிறுத்தவில்லையே!

இலட்சுமி அம்மா ஒரு தொய்வுநோயாளி; தொய்வு கண்டுவிட்டால் அம்மாவுக்கு மரண அவஸ்தைதான். கண்முழி பிதுங்கி தொண்டை நரம்புகள் புடைத்து, வயிறு முதுகோடு ஒட்டுமளவிற்கு, இழுப்பு அம்மாவைப் பாடாய்ப்படுத்தும். நானாந்த நிகழ்வானாலும் பிள்ளைகள் பரிதவித்துப்போவார்கள். அவர்களால் என்னதான் செய்யமுடியும்? அத்தனையும் பிஞ்சுகள்!

இலட்சுமி அம்மாவிற்குக் கரும்புத் தோட்டத்தில் கூலிவேலை, தினக்கூலி அறுபது ரூபா எல்லா நாட்களிலும் வேலை இருப்பதில்லை. வேலையுள்ள நாட்களில் கஞ்சியும், வேலையில்லாத நாட்களில் வெறும் வயிறுமாய் அம்மாவின் உழைப்பை மட்டுமே நம்பிய பட்டினிச் சீவியம் அவர்களுடையது.

இலட்சுமி அம்மாவின் குடும்பம் வறுமைக்கு உதாரணமாய் வாழ்ந்ததல்ல. ஜெகநாதன் இலட்சுமியைக் கைப்பிடித்த மறுவருடத்தில் அவர்களின் முதல் இடப்பெயர்வு நிகழ்ந்தது. அது 1973 ஆம் வருடம் கண்டியிலிருந்து வன்னிக்கு. இங்கு வந்து குழந்தை குட்டிகள் என்று குடும்பம் பெருகி கமம்செய்து - கூலித் தொழில்பார்த்து அவர்கள் நன்றாகத்தான் வாழ்ந்தார்கள்.

அந்தக் குடும்பத்தின் ஆர்ப்பாட்டமற்ற அமைதியான வாழ்வை நிலைகுலைத்துச் சரித்தது ஒரு இடப்பெயர்வு. சத்ஜெய இடப்பெயர்வும் அதனைத் தொடர்ந்த குடும்பத்தின் மூத்த உயிர்களின் இழப்புக்களுமே இலட்சுமி அம்மாவையும் சின்னஞ்சிறுசுகளான நான்கு பிள்ளைகளையும் யாருமேயற்ற நிர்க்கதி நிலைக்குத் தள்ளின.

ஜெகநாதன் - இலட்சுமி தம்பதியினருக்கு ஒன்பது பிள்ளைகள். இலட்சுமி அம்மாவின் இரண்டு பெண்களும் ஒரு மகனும் திருமணம் முடித்து விட்டிருந்தார்கள். அம்மாவின் தாய்மைப் பாத்திரத்தில் இரண்டு வகை, ஒன்று பிள்ளைகளின் தாய் இன்னொன்று போராளியின் தாய். அம்மாவிற்கு போராளித்தாய் என்ற பெருமையைக் கொடுத்தவன் மகேந்திரன் - கடற்புலி சிறையஞ்சன். யாழ்ப்பாணத்தில் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை நடந்து கொண்டிருந்தபோது (1995) மகேந்திரன் இயக்கத்திற்கு நடந்தான்.

ஆனையிறவுப் படைத்தளத்திலிருந்து கிளிநொச்சி நோக்கிப் பரவிய சிங்கள இராணுவ இயந்திரத்தின் சத்ஜெய் படைச்சக்தி வன்னிப்பெரு நிலத்தில் ஒரு பெரு நகரையும் நகர் சார்ந்த கிராமங்களையும் விழுங்கியது.

பாரதிபுரத்திலிருந்து - அவர்கள் வாழ்ந்த அவர்களோடு வாழ்ந்த எல்லாவற்றையும் இழந்து - இலட்சுமி அம்மாவின் குடும்பம் பொன்னகருக்கு இடம்பெயர்ந்தது.

சத்ஜெய படைச்சக்தியின் திரண்ட மையமாகிய கிளிநொச்சிப்படைத்தளம் தன்னைச் சுற்றிலும் தூரத்தே ஒடுங்கியிருந்த குடியிருப்புக்களையெல்லாம் அச்சுறுத்தியபடி திமிர் பூத்துக் கிடந்தது.

படைத்தளத்திற்கும் படைத்தளத்தைக் கண்காணிக்கும் விடுதலைப் புலிகளின் காவலரண் வரிசைக்கும் இடைப்பட்ட மனித சூனியப்பிரதேசத்திற்குள் இருக்கும் கிராமங்களைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்று பொருட்கள் எடுத்துவருவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார்கள். கிளிநொச்சிப் பகுதியில் வீடு பார்க்கச் சென்றவர்கள். வெட்டுண்ட பிணங்களாகக் கண்டெடுக்கப்படும் நிகழ்வுகள் மலிந்திருந்த போதும் தங்கள் வயிற்றுத் தேவைகளின் போதாமையைச் சமாளிக்க அவர்களுக்கு அதைத்தவிர வேறு வழியிருக்கவில்லை.

செத்துப்போகும் கணம்வரை நான் சாகமாட்டேன். என்று நினைத்திருப்பது தானே மனித இயல்பு. தங்களுக்கு எதுவும் நடக்காது இராணுவத்தின் கொலைக்கரங்களில் சிக்காமல் நாங்கள் தப்பிவிடுவோம் என்ற நம்பிக்கையோடு எல்லாரும் வீடுபார்க்கச் சென்று வந்தார்கள். நம்பிக்கை தானே வாழ்க்கை அதை அவர்கள் கடைப்பிடித்தார்கள். ஆனால் இந்த விடயத்தில் சில நம்பிக்கைகள் வீண் போகவில்லையாயினும் பல நம்பிக்கைகள் பிணமாய்த்தான் போயின. வீடுபார்க்கச் சென்றுவரும் இந்த வழக்கமான நிகழ்வொன்றின் போதுதான் தனக்கு மூன்று பேரப்பிள்ளைகளைத் தந்த தனது மூத்த மகன் இராஜேந்திரனை இலட்சுமி அம்மாள் இழந்தாள்.

சம்பவதினம் இராஜேந்திரனும் இலட்சுமி அம்மாவின் இளையமகன் சசிகுமாரும் வீட்டுக்குச் சென்றிருந்தார்கள். காடுமண்டி மயானவெறுமைசூழ அநாதையாய் நின்றிருந்த தங்கள் வீட்டில் இருவரும் காரியங்களில் ஆழ்ந்திருந்தார்கள்.

பற்றைகளுக்குள்ளிருந்து சந்தடியற்று வெளியேறிய சிங்களப் பண்டயாட்கள் சகோதரர்கள் இருவரையும் சூழ்ந்தனர். திகைத்து நாக்கு மேலண்ணத்தில் ஒட்டி ஒருபேச்சும்வராது சகோதரர்கள் இருவரும் கையெடுத்துக் கும்பிட்டார்கள். சிங்களப்படைக்கு தமிழர்கள் எல்லோருமே புலிகள்தானே! புலிபுலியென்று கத்தியபடி காடைக்கும்பல் இருவரையும் நையப்புடைத்தது.

சசிகுமாரை ஒரு மரத்தோடு சேர்த்துக் கட்டிவிட்டு இராஜேந்திரனை கதறக்கதறக் கொண்டு போனார்கள். உச்சஸ்தாயியில் உருவெடுத்த அவனது அவலக்குரல் தேய்ந்து. தேய்ந்து சற்றைக்கெல்லாம் அடங்கிப்போனது. காட்டோடு போராடி - தன்னை விடுவித்துக் கொண்டு இரத்தமும் கண்ணீருமாய் அம்மாவிடம் வந்துசேர்ந்தான் சசிகுமார் கயிறு சிராய்த்து மரம் சிராய்த்து இராணுவச் சப்பாத்து மிதித்து இரத்தவிளாறாகி வந்துநின்ற பிள்ளையைப் பார்த்து விக்கித்துநின்றாள் அம்மா, "என்னையா கோலமிது என்ர குஞ்சு ஆரையா இந்தப்பாடுபடுத்தினது." பிள்ளையின் கண்டல் காயங்களையும் சிராய்ப்புக்காயங்களையும் தடவியவாறு அம்மா பதறினாள்.

- உமாஜிப்ரான் -

இதற்குப் பதில் சொல்லிவிடலாம். ஆனால் அண்ணா எங்கையப்பு என்று அம்மா கேட்கப்போகும் அடுத்த கேள்விக்கு என்ன பதிலைச் சொல்லுவது? சசி திணறிக் கொண்டிருந்தபோது அம்மா அதைக் கேட்டள் அண்ணா எங்கையப்பு சசி மௌனமாய் அழுதான். அம்மாவிற்கு அபத்தமாய் ஒரு சந்தேகம் பொறிதட்டியது முகத்தில் கலவரம் படர, பதிலொன்றும் கூறாமல் கண்ணீர் வழிய வழிய பேயறைந்தவன் போல் நின்ற பிள்ளையின் தோள்களைப் பற்றி உலுக்கி அம்மா கத்தினாள் அண்ணா எங்கையடா. அதற்குமேலும் தாயின் தவித்த நிலையைத் தாங்க முடியாமல் அண்ணனைக் கொண்டுபோயிற்றாங்கள் அம்மா என்றபடி தாயின் மடியைக் கட்டிக்கொண்டு கதறினான் சசி. அம்மா இடிவிழுந்தவள் போலானாள். இராஜேந்திரனைக் கட்டியவள் மனஞ்சுருண்டு நொருங்கிப்போனாள் பொட்டழியும் வயதா அவளுக்கு! பட்டப்பகலிலும் காலம் இருண்டதாய் உணர்ந்தாள். செத்துப் போவதை கண்ணிவிட்டுப் போய்விட்டதாகச் சொன்னால் நம்புகின்ற வயதுப்பிள்ளைகள் அப்பா கண்ணிவிட்டுப் போய்விட்டதாக நம்பினார்கள். அவர்கள் இழவு செய்யவில்லை ஆனால் ஒரு இழவு வீட்டுக்கும் அவர்களின் வீட்டுக்கும் எந்த வித்தியாசமும் இருக்கவில்லை. இது நடந்த பிற்பாடு வீடுப்பக்கம் செல்வதை அவர்கள் அறவே நிறுத்திவிட்டார்கள். ஆனால் நாட்கள் செல்ல அயலவர்கள் போய்வருகின்ற தைரியத்தில் மீண்டும் வீட்டுக்குச் சென்றுவர ஆரம்பித்தார்கள்.

இராணுவ அர்த்தத்தில் மனிதசூனியப் பிரதேசம் என்பதற்கு மரணப்பொறி என்ற பொருள்விரிவும் உண்டு. வெறும் தேங்காய்க்கும் முருக்கங்காய்க்கும், பாத்திரம் பண்டத்திற்குமா மக்கள் தங்கள் உயிர்களை அந்த மரணப் பொறிக்குள் நுழைகின்றார்கள்? இல்லை! வீடுபார்க்கவென்று அவர்கள் புறப்படும்போது ஒரு ஆதியந்த உறவைப் பார்க்கப்போகும் ஆவலும் கறுகறுப்பும் அவர்களைத் தொற்றிக்கொள்கிறது. ஒரு குடும்பத்தின் இன்பம் - துன்பம் என்ற இரண்டு முதன்மை உணர்வுகளிலும் முதலில் பங்கெடுத்துக்கொள்வது வீடுதானே! அதுதானே அவர்களின் முதல் உறவு. அந்த உறவு அவர்களுக்கு எல்லாமுமாக இருக்கிறது. வீட்டுக்குச் சென்று - முற்றத்தில் நடந்து திண்ணையில் சரிந்து, கிணற்றில் குளித்து, இடம் பெயர்ந்த வாழ்வின் அவலச்சுமைகளை இறக்கி வைத்துவிட்டு - அந்த உறவோடு வாழ்ந்த இன்பமான இப்பொழுதுகளை நெஞ்சில் கிளர்த்தி மனதை இலேசாக்கி மீள்கிறார்கள். இங்கே உயிரைவிடவும் அந்த உறவுதரும் ஆறுதல் பெரிதாய் இருப்பது ஆச்சரியமல்ல. உயிரையும் பொருட்படுத்தாது ஆறுதலைத் தேடுமளவிற்கு மனங்களைச் சிதைக்கும் இடப்பெயர்வு வாழ்வின் அவலங்கள்தான் ஆச்சரியமானவை. அன்றும் (03.05.1996) அப்படித்தான் அப்பாவுடன் சசிக்குமாரும் புலவேஸ்வரியும் பாரதிபுரத்திற்குச் சென்றார்கள் வீட்டுவளவிற்குள் அவர்கள் நுழைந்தவுடன் எங்கிருந்து முளைத்தார்களோ தெரியாது - முப்பதுக்குமேற்பட்ட சிங்களப்படையாட்கள் அவர்களை மொய்த்துக்கொண்டார்கள். பத்து வயதுச் சிறுமியான புலவேஸ்வரியையும் அவளைவிட நான்கு வயதுகள் அதிகமான சசிகுமாரையும், அவர்களின் முதிய தந்தையையும் இராணுவத்தினர் புலியென்று சொல்லி வதைத்தார்கள். கைகளை முதுகுப் புறமாகச் சேர்த்துக்கட்டி ஒரு பற்றை மண்டிய பகுதிக்கு அழைத்துப்போனார்கள். அங்கே பாரதிபுரத்தில் புலவேஸ்வரியின் வீட்டருகில் வசித்தவரான கவியன் என்பவரை

(மூன்று பிள்ளைகளின் தந்தை) குருரமைப் படுகொலை அடித்து நொருக்கிப் போட்டிருந்தது. எல்லோரையும் ஒன்றாக இருத்திவிட்டு இராணுவக் கும்பல் தனது வழமையான வெறியாட்டத்திற்குத் தயாரானது.

இளவெறியேறிய முகங்கள் - விளங்காத பாஷையின் இடையிடையே விளங்கும் கொச்சைத் தமிழ் - முரட்டுக்கத்திகள் இவையெல்லாம் பருந்தின் கூர்த்த நகவிரல்களில் சிக்கியிருக்கும் கோழிக்குஞ்சுகளாய்

ப் படலம்

வதங்கியிருந்த நான்கு கையறு நிலையுயிர்களுக்கும் அவர்களின் அவலமுடிவைத் தெரிவித்துவிட்டன. உடல்கசிந்த குருதியுலர்ந்து விகாரமாய்த் தெரிந்த முகங்களை ஒருவரையொருவர் பாவமாய்ப் பார்த்தார்கள். ஒரு இராணுவத்தினன் அப்பாவின் கைக்கட்டையவிழ்த்து பற்றை மறைவுக்குக் கூட்டிப்போனான். புவேனேஸ்வரியின் மிரண்ட விழிகள் அப்பா சென்று மறைந்த பற்றையை ஏக்கமும் அச்சமுமாய் துளாவின. இராணுவச் சப்பாத்துக்கள் தெரிந்தன. தோழில் இருந்த துவாய்த் துண்டை விரித்து அப்பா படுத்ததும் தெரிந்தது. அப்பாவின் முகத்தில் அசாதாரண அமைதி அப்பாவின் ஏக்க விழிகள் பிள்ளைகள் இருந்த திசையை ஒரு தடவை பார்த்தன. அதன் பிறகு அப்பாவின் தலையை ஒருவன் நிலத்தோடு சேர்த்து அழுத்திப்பிடிப்பது மட்டும்தான் தெரிந்தது. சொற்ப நேரத்தில் அவர்கள் மட்டுமே திரும்பி வந்தார்கள். அப்பா திரும்பப் போவதில்லை என்பதை கையிலிருந்த முரட்டுக்கத்திகளின் குருதிச் சொட்டுக்கள் சொல்லின.

அப்பாவை கொன்று விட்டார்கள். அப்பா பாவம் பிள்ளைகளுக்காக மாடாய் உழைத்த அப்பா உயிர் பிரியும் இறுதிக் கணத்திலும் பிள்ளைகள் உயிர் தப்பிவிட வேண்டும் என்றுதான் அப்பா நினைத்திருப்பார். இருந்த நிலையில் நிலத்தோடு சரிந்து பிள்ளைகள் இருவரும் அழுதார்கள். புவனேஸ்வரிக்கு அப்பாவைப்பார்க்க வேணும்போல் இருந்தது. அப்பாவை அவர்கள் குற்றுயிராய் விட்டுவந்திருந்தால் அப்பா தண்ணி தண்ணி என்று கேட்பது போல் பிரமை தட்டியது. ஆனால் எழும்பிப்போகத் தயிரியமில்லை.அவளுக்கு சுற்றிலும் கொடிய சர்ப்ப விஷம் பொருத்திய மனிதர்கள் சற்று அசைந்தாலும் தன்னையும் கொன்று விடுவார்களென்று சாவுக்கஞ்சி அந்தப் பிஞ்சுப் பெண் கேவிக்கேவி அழுதபடி கிடந்தாள்.

ஒரு வெறியாட்டுப் படலத்தை முடித்த பின்னும் அங்கிருந்து நகரும் எண்ணம் அந்த இராணுவக் கும்பலுக்கு இருக்கவில்லை. பொழுது இருண்டு மயானக் கிலி பரவத் தொடங்கியது. புவனேஸ்வரியின் அழுகையை கொச்சைத் தமிழில் அதட்டியவாறு கைக்கட்டுக்களை அவிழ்த்துவிட்ட ஒரு இராணுவ வெறியன் மூவருக்கும் உணவுப்பொதி கொடுத்தான். அப்பாவைக் கொன்ற இரத்தக்கைகளால் பிள்ளைகளுக்கு உணவுகொடுக்கும் குரூரப்பரிகாசம், இதுதான் சிங்கள பௌத்தம்! உப்புப் புளியில்லாத பண்டமும் சுவையாகத் தெரியும் பசி அவர்களுக்கு ஆனாலும் எப்படிச் சாப்பிடுவார்கள்? வீட்டில் பிணங்கிடக்கும்போது அடுப்பில் உலையேற்றாத பாரம்பரியமல்லவா எங்களுடையது! அதுவும் இங்கே, கண்ணுக்கு முன்னால் கொடூரச் சாவடைந்து கிடப்பது அவர்களின் குருதி மூலமல்லவா! தங்களை ஊட்டி வளர்த்த அப்பா பிணமாகக் கிடக்கும் போது பசி ஒரு குறையாகவா இருக்கும் பிள்ளைகளுக்கு.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

புவனேஸ்வரி: இரத்தமும் கண்ணீருமாய் பத்துவயதுப் பிள்ளைமனதில் துயரவடு விழுத்திய அந்தக் கொடிய இரவு புவனேஸ்வரியைப் பொறுத்த வரை விடியவே இல்லை. அதன் இருள் இன்னமும் அவள் மனதைக் கப்பியிருக்கிறது.

அந்த மரணப்பொழுது மெதுமெதுவாய் கழிந்து கொண்டிருந்தது. புவனேஸ்வரிக்குப் பக்கத்தில் வந்து சம்மணமிட்டு அமர்ந்தான் ஒரு படையினன். துப்பாக்கிக் கத்தியை எடுத்து விரல் தடவி அதன் கூர்மையை பரிசோதித்தவாறு அவளிடம் கொச்சைத் தமிழில் பேச்சுக்கொடுத்தான். அவளின் வலது கையைப் பிடித்துவிட்டை. விரலில் கத்தியால் மெதுவாய்க் கீறியபடி கேட்டான் 'பாப்பாவுக்கு புலி தெரியுமா?' சாவை மிக அருகில் உணர்ந்த அவளுக்கு ஒரு பதிலும்

அதிகாலை மூன்று மணியளவில் அந்த இராணுவக்கும்பல் புறப்பட ஆயத்தமானது. தங்களை உயிர் பிழைக்க விட்டுப் போகிறார்கள் என்று இவர்கள் நினைக்க, கத்திகள் முளைத்த கைகளுடன் அவர்கள் சூழ்ந்தனர். சாவு தங்களை அண்மிப்பதை தெரிந்துகொண்ட மூன்று சீவன்களும் கைபொத்திக் கும்பிட்டு, கண்ணீர் பெருக்கி, கால்பிடித்துக் கெஞ்சிக் கதறக் கதற வெட்டினார்கள் வெறியர்கள். ஒரு கத்தி சசிகுமாரின் கழுத்தில் மிக ஆழ இறங்கியது. பீறிட்டாய்ந்த குருதி வெட்டியவனின் முகத்திலும் வழிந்தது. இன்னொருவனின் கத்தி கணேஸ் அண்ணாவின் கழுத்தைப் பிளந்தது.

சொல்லவரவில்லை. பெருவிரலில் வலிதெறிக்க அவளின் அழுகை வலுத்தது. 'பாப்பா அழவேணாம் பயம் வேணாம் நாளைக்கு பாப்பா வீட்ட போகலாம்.' சொல்லியவன் இப்போது அவளின் வலதுகை மணிக்கட்டில் இரத்தவரிகளைக் கீறினான். அழுதால் தன்னைக் கொன்றுவிடுவான் என்ற பயத்தில் அழுகையை மென்று விழுங்கி வலியால் முனகினாள் புவனேஸ்வரி.

மூன்று உயிர்களையும் மெதுமெதுவாய் உயிர்வதை செய்தே இரவைக் கழித்துக் கொண்டிருந்தது இராணுவக் கும்பல். இரையாக்கிக் கொள்ளும்முன் பூனையின் முன்விளையாட்டுக்களால் வதையுறும் சுண்டெலியின் நிலையில் இருந்தார்கள் மூவரும்.

புவனேஸ்வரியின் கழுத்தில் கத்தியிறங்கும்போதே ஏதேச்சையாக கத்தியின் விசையை எதிர்க்காது அதன் விசையோடுசேர்ந்து அவளும் விழுந்தாள். கழுத்தில் இருந்து குருதி வழிந்தது. ஆனால் உயிர் வழிந்துவிடவில்லை. அசைவெதையும் காட்டாது விறைத்துக் கிடந்தாள்.

தங்களின் தேர்ந்த வெட்டுக்களில் நம்பிக்கை மிகக் கொண்டு இரண்டாவது வெறியாட்டுப் படலத்தையும் முடித்துக் கொண்டு வெறிக்கூச்சல் எழுப்பியபடி அங்கிருந்து அகன்றது இராணுவக் கும்பல். சிங்களக்கூச்சல் தூர விலகும் வரை பொறுத்திருந்து தலையைத் தூக்கி அருகில் கிடந்த உடல்கள் இரண்டையும் தடவி அண்ணனைக் கண்டுபிடித்து அசைத்துப் பார்த்தாள். அவனில் ஒரு சலனமும் இல்லை. புவனேஸ்வரிக்குக் கழுத்திலிருந்து குருதி வழிந்து சட்டை தெப்பலாகியிருந்தது. தலையைச் சுற்றியது. தொண்டைவரண்டு தண்ணீர் விடாய்த்தது. எழுந்து உட்கார்ந்து கணேஸ் அண்ணனை அசைத்துப் பார்த்தாள், உயிரசைவு தெரிந்தது. தன்னைச் சமாளித்துக் கொண்டு எழுந்து கணேசண்ணாவின் தலையைப்பிடித்து நிமிர்த்தினாள். வலுவின்றி தலை கொளித்து விழுந்தது. அண்ணனுக்கு அருகில் அமர்ந்து தோளைப் பிடித்து நிமிர்த்த முயன்றாள். முகம் அவளது முதுகுபார்க்கத் திரும்பியது. அவனது கழுத்து ஏறக்குறைய துண்டித்த நிலையில் இருந்தது எந்தச் சந்தேகமும் இல்லாமல் அண்ணன் இறந்துவிட்டிருந்தான். புவனேஸ்வரி தன் ஆசையண்ணனைத் தடவித் தடவி அழுதாள். திக்குகள் தெரியாமல் மூடியிருந்த இருளுக்குள் அடுத்து என்ன செய்வது என்று அந்தக் குழந்தைப் பெண்ணுக்குப் புலப்படவேயில்லை.

அப்பா கிடந்த பற்றையையும் அண்ணனையும் மாறிமாறிப் பார்த்தாள். மீண்டும் அழுகை பொத்துக்கொண்டு வந்தது. அப்பாவையும் அண்ணனையும் அநாதைப் பிணங்களாக விட்டுப்போக அவளால் முடியவில்லை. ஆனால் அந்த இராணுவக் கும்பல் திரும்பவும் வந்து விடுமோ என்ற சாவச்சம் அவளை அங்கிருந்து துரத்தியது.

நம்பிக்கையை வரவழைத்துக் கொண்டு தன் பலம் முழுவதையும் பிரயோகித்து கணேசண்ணாவைத் தூக்கி நிமிர்த்தினாள். தன் அண்ணாவின் சாரத்தைக் கிழித்து அவரது கழுத்துக்கும் தனது கழுத்துக்கும் கட்டிக்கொண்டாள். கணேசண்ணாவின் தலை கொளித்துக்கொளித்து விழுந்தது. அவரால் அசைவுக்கூட முடியவில்லை. ஆனால் புவனேஸ்வரி விடாப்பிடியாக நின்று அவரைத் தூக்கி நிறுத்தி ஆதாரமாக அணைத்துப்பிடித்து நடத்தி புலிகளின் காவலரண் ஒன்றுக்கு கொண்டுவந்து சேர்த்தாள்.

இரத்தமும் கண்ணீருமாய் பத்துவயதுப் பிள்ளைமனதில் துயரவடு விழுத்திய அந்தக் கொடிய இரவு புவனேஸ்வரியைப் பொறுத்தவரை விடியவே இல்லை. அதன் இருள் இன்னமும் அவள் மனதைக் கப்பியிருக்கிறது!

போராளியின் குருதிச்சுவடுகள்

உளப்பலத்தால் உழைத்தவன்



கரும்புலி மேஜர் குமுதன்

பெயர்: மயில்வாகனம் இன்பராஜ்

ஊர்: யாழ்ப்பாணம்

கரும்புலியாக முன்: ஆகாய கடல்வெளிப் பெருஞ்சமர், மின்னல் இராணுவ நடவடிக்கை முறியடிப்புத் தாக்குதல், ஓயாத அலைகள் 01 இல் அலம்பில் பகுதியில் தரையிறங்கிய விசேட அதிரடிப்படையினர் மீதான தாக்குதல், சத்ஜய 1, 2 போன்ற இராணுவ நடவடிக்கைகளிற்கு எதிர் நடவடிக்கையிலும்.

கரும்புலியான பின்: தாண்டிக்குள இராணுவத்தளம் மீதான தாக்குதல், மணவாளன் பட்டமுறிப்பில் உலங்குவானூர்தி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்.

இவன்பெற்ற சிறப்புப் பயிற்சிகள்: 50 கலிபர் கனரக ஆயுதப் பயிற்சி, 203 பயிற்சி, கரும்புலி அணிக்குரிய சிறப்புப் பயிற்சி.

கரும்புலி மேஜர் குமுதன்,

அந்த நிகழ்வுகளில் இருந்து குமுதனின் நினைவுகளை பிரிக்க முடியாததாய் இருந்தது. இப்போதெல்லாம் அவனது சுவாசம் அந்த நினைவுகளைத் தழுவியதாகவே வந்துபோனது. அதேநினைவுகள் தான் குமுதனின் கண்களையும் நெஞ்சையும் நினைத்துக் கொண்டிருந்தன.

வெட்டையும் திட்டுத்திட்டாக வளர்ந்திருக்கும் சிறு பற்றைகளும் நிறைந்து பரந்துவிரிந்த அந்தப் பிரதேசத்தின் நெஞ்சைக் கிழிப்பதைப்போல கிளிநொச்சி நகரினை நோக்கி இராணுவம் முன்னேறிக் கொண்டிருந்தது.

பெரிய இராணுவ நகர்வை எதிர்த்து நேருக்குநேர் சமரிட்டுக் கொண்டிருந்த எமது தாக்குதல் அணியின் ஒரு பிளட்டூன் அணித்தலைவனாக குமுதனும் நின்று சமரிட்டுக்கொண்டிருந்தான்.

ஒவ்வொரு அங்குல நிலத்தையும் இராணுவப் பாதங்கள் மிதிக்கின்றபோதும் அவனிற்குள்ளேயே எரிந்த ஆவேச நெருப்பால் கண்ணிலும் குரலிலும் இடையிடையே பொறிபறந்தது.

இதே தாக்குதல் அணியுடன் சற்று நாட்களுக்கு முன் அலம்பில் பகுதியில் தரையிறங்கிய சிறப்புப் படையினரை எதிர்த்துச் சண்டையிட்டு இராணுவம் நினைத்துவந்த இலக்கை எட்டவிடாது தடுத்ததில் பங்கெடுத்தவன் குமுதன்.

தாக்குதல் அணியின் பிளட்டூன் உதவி அணித்தலைவராக நின்றாலும் சண்டை உக்கிரம் அடைந்துசென்றபோது ஒருபகுதி முழுவதற்குமான கட்டளைகளை அவனே வழங்க வேண்டியிருந்தது.

அதிகப் பேர் விழுப்புண்பட்டு வீரச்சாவடைந்து போனமையாலும், அணியின் ஆட்தொகையில் பெரும் சரிவு ஏற்பட்டிருந்தது. அந்த இறுக்கம் நிறைந்த சூழலிலும் இருக்கும் உறுப்பினர்களை ஒழுங்குபடுத்தி எதிரி முன்னேறாதவாறு மறிப்புப்போட்டுவிட்டு காயக்காரரையும் வீரச்சாவடைந்தோரையும் பின்னுக்கு அனுப்பினான்.

இதுவரைக்கும் தன் தோள்பட்டையில் பாய்ந்திருக்கும் குண்டைப் பற்றியோ அல்லது அவனின் மேல்சட்டையையும் மீறிப் பாய்கின்ற குருதியைப் பற்றியோ கவனிக்கவில்லை. அவனது சிந்தனையும் செயல்களும் இராணுவத்தின் நோக்கத்தை எப்படியும் முறியடித்துவிட வேண்டுமே என்று துடித்துக் கொண்டிருந்தன.

அதுபோன்றதொரு துடிப்பு நெஞ்சில் கனன்று கொண்டிருக்கவே சத்ஜெய எதிர்ச்சமர்க் களத்திலும் அவன் சுழன்று கொண்டிருந்தான். "அண்ணை எங்களிற்கு கிட்டவா டாங்கி வந்திட்டுது" குமுதனுக்கு பக்கவாட்டாக இருந்த காவலரணில் இருந்தவன் நிலைமையை குமுதனிற்குத் தெரியப்படுத்தினான். மரஞ்செடிகளைப் போல உருமாற்றம் செய்து நகர்ந்துகொண்டிருந்த கவசவாகனங்கள் சிறுபற்றைகளை நெரித்து பெரிய புகைமண்டலங்களை உருவாக்கியபடி காவலரணிற்கு மிக அண்மையாக வந்துநின்றது. "அங்கால பக்கத்தால டாங்கிகள் வந்து முட்டுப்பட்டாணாம்." "நீங்கள் அங்கபோய் அதைமறியுங்கோ, கவனம் மறைப்பெடுத்துப் போங்கோ."

குமுதன் சொல்லி முடிக்கின்றபோது அவனது கட்டளைக்காகவே காத்திருந்த இரண்டு டாங்கி எதிர்ப்பு வீரர்களின் கால்களிலும் வேகம் பிறப்பெடுத்தது. சண்டை எல்லா இடங்களிலும் பெரும் முழக்கமிட்டு தொடர்ந்து கொண்டிருந்தது.

இரண்டு கவச எதிர்ப்புப் போராளிகளும் அந்த டாங்கிகளை தடுத்து நிறுத்துவதற்காக போராடிக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் எதிரியின் கடு வலுவினால் அந்தப் பிரதேசம் முழுவதும் வலைகளாக ரவைகள் பொழியப்பட்டுக்கொண்டிருந்தது. அந்த வலைப்பின்னலிற்குள்ளேயே இரண்டு கவச எதிர்ப்புப் போராளிகளும் சிக்கிக் கொண்டனர்.

குமுதன் இறுதியாகப் பார்த்துவிடை கொடுத்தனுப்பிய இரண்டு இளைய வீரர்களுமே வித்துடல்களைக்கூட பார்க்கமுடியாதளவு உடல் சிதைந்துபோய் இருந்தார்

கள். அந்த நிகழ்வைக் கண்டபின்னர் குமுதனது கண்கள் அதையே சொந்தமாகக் கொண்டன. கண்களால் கண்டு பதிந்து கொண்ட அந்த நிகழ்வுகளை எண்ணுகின்ற போதெல்லாம் நெஞ்சு பெரிதாக வலிக்கிறது.

மற்றவனின் துன்பத்தைக்கண்டு தாங்கிக்கொள்ள முடியாத அவனிற்கு அவனது நெஞ்சில் ஆழமாக பதிந்த நிகழ்வுகள் ஆறாத தழும்புகளாய் இருந்தன. அந்தப் பெருஞ்சமர் ஓய்ந்தபோதும் குமுதனின் மனம் ஓயவில்லை. தனியொரு நெஞ்சிற்குள் மட்டும் எத்தனையோ சமரரங்குகள் திறக்கப்பட்டன. முடிவிலாது குமுறிக்கொண்டிருந்த குமுதனின் கண்களில் புதியதான வடிவம் ஒன்றின் வாசல் முளைவிட்டது. குமுதன் தனக்குள்ளேயே எரிந்துகொண்டிருக்கும் பெரிய இலட்சிய நெருப்போடு தான் கரும்புலிகள் அணியிற்குள் தன்னை இணைத்துக் கொண்டான்.

அங்கு அவனை எதிர்கொள்ளவிருந்த சவால்களோ ஏராளம். இனியென்னென்று குமுதன் அந்தக் காரியத்தைச் செய்து முடிக்கப்போகிறான். சாதாரண மனித வலுவுடையவர்களே செய்ய சிரமப்படும் அந்தக் கரும்புலிகள் அணிப்பயிற்சியை குமுதன் செய்து முடிப்பானா?

ஆச்சரியத்தால் உயர்ந்த புருவங்களை உயரவைத்துபடியே அதிசயிக்கவைத்தான்.

ஒரு போராளி தன்னைக் கரும்புலிகள் அணியில் சேர்த்துக்கொள்ளப்போகிறான் என்றால் அவனைப் பற்றிய அடிப்படையான சில தகுதிகளைப் பரிசோதிப்பதுண்டு. அதுபோலவே குமுதனும் தன்னைக் கரும்புலிகள் அணியில் சேர்த்துக் கொண்டபோது அவனைப்பற்றிய தகுதிகளும் பார்க்கப்பட்டது.

ஒரு போராளி கரும்புலிகள் அணியில் தன்னை இணைத்துக்கொள்ள வேண்டுமாயின் அவர் இரண்டு வருடங்கள் இயக்கம் வழங்கிய பணிகளைச் சரிவரச் செய்து முடித்திருக்க வேண்டும்.

குமுதனைப் பொறுத்தவரை ஐந்து வருடங்களுக்கு மேலாக இயக்கம் வழங்கிய கடமைகளை இயக்கம் எதிர்பார்த்தது போல செய்துமுடித்தவன். எனவே அதில் அவனிற்குத் தடை இருக்கவில்லை.

குறிக்கப்பட்ட நேரத்திற்குள் குறித்த சில பயிற்சிகளை செய்துமுடிக்கும் உடற்தகுதி பெற்றவரா என்ற கேள்விக்கும் அவன் இதுவரை பெற்ற பயிற்சிகள் விடைபகர்ந்தன. குமுதன் இயக்கத்திற்கு வந்ததில் இருந்து எந்தப்பயிற்சியிலும் விட்டுக்கொடுத்ததில்லை. எப்படியான பயிற்சி என்றாலும் செய்து முடிக்கக்கூடியவன். இதுவரை 50 கலிபர் பயிற்சி, சிறப்பு அதிரடிப்படைப் பயிற்சி போன்றன பெற்றிருக்கிறான். எனவே அதிலும் சிக்கல் இருக்கவில்லை. ஆனால் அடுத்துவந்த மருத்துவப் பரிசோதனைதான் நிறையப்பேரிற்கு அதிர்ச்சிதருவதாக இருந்தது. இதுவரையும் தனக்குள்ளேயே மறைத்துவைத்திருந்த நோய் அப்போதுதான் வெளித்தெரியவந்தது. ஆனால் இதுவரை எந்தச் சந்தர்ப்பத்திலும் அவன் தன் நோயினை வெளிக்காட்டியதே இல்லை. குமுதனிற்குள் இருக்கும் இதயநோயையும், தொய்வுநோயையும் மருத்துவப் பரிசோதனைமூலம் அறிந்துகொண்டபோது, அவனைக் கரும்புலிகள் அணியில் சேர்த்துகொள்வதற்கான அனுமதி மறுக்கப்பட்டது.

குமுதனோ விடுகிறபாடில்லை. ஒரேபிடியாகத் தன்னைக் கரும்புலிகள் அணியில் இணைத்துக்கொள்ளுமாறு வேண்டினான். "அண்ணை தேர்வுப் பயிற்சி வரைக்கு மெண்டாலும் விடுங்கோ, நான் அதில என்னால முடியுமென்று நிரூபிக்கக்காட்டுறன்" என்று கெஞ்சலான குரலில் உறுதியாகக் கேட்டுக்கொண்டிருந்தான். அவனது இலட்சிய தாகம் முழுவதையும் தனது குரலிலே பரவவிட்டான்.

அவனின் உறுதிகுலையாத தன்மை வீணாகவில்லை. தேர்வுப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டது. அதில் குமுதனும் ஒருவனாக இருந்தான்.

தேர்வுப்பயிற்சி நிறைவுறும்போது அனைத்துப் பயிற்சிகளிலும் சித்திபெற்று தனது இலட்சியத்திற்கு நோய் இடையூறு இல்லை என நிரூபித்தான்.

இப்படி தேசத்திற்காகத் தான் வரித்துக்கொண்ட கொள்கையில் உறுதியான குமுதன்தான் இப்போ ஆனையிறவுப் பெருந்தளத்திற்குள் நுழைந்த கரும்புலிகள் அணியிற்கு தலைமைதாங்கி இலக்கை நெருங்கிக்கொண்டிருந்தான். இன்னும் சிலவினாடிகளைக் காலம் வேகமாக விழுங்கிக்கொள்ளுமாயின் அங்கே இருளாய், அமைதியாய் நிலைத்திருக்கும் சூழ்நிலை மாறி புதிய சமர்க்களம் உருவாகும்.

அந்த இறுக்கமான நேரத்திலும்கூட காலமும், கரும்புலிகளின் வீரர்களின் கால்களும் முன்னோக்கி வேகமாக நிதானமுடன் நகர்ந்துகொண்டிருந்தன. நினைவுகள் மட்டும் பின்னோக்கி விரையத் தொடங்கின.

கரும்புலிகள் பயிற்சி முடிய தாண்டிக்குளம் சண்டைக்குச் சென்று, அங்கு விழுப்புண்பட்டமையால் தாக்குதலில் பங்குபெறாது பின்னிற்கு வந்ததும் பின் விழுப்புண் குணமடைய மணவாளன்பட்ட முறிப்புச் சண்டையிற்குச் சென்றது என்று எல்லா நிகழ்விலும் நினைவுகள் தடம்பதிக்கத் தொடங்கியது.

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)



வாழ்வுக்கான போருக்கு கருத்து மாற்றம் அவசியம்

இலங்கையில் வாழும் இரு தேசிய இனங்களான தமிழர், சிங்களவர் ஆகியோர்களிங்கு மறுக்க முடியாத ஓர் உண்மை இருக்கின்றது. அதாவது இந்த இரண்டு இனங்களினதும் தாயகம் இலங்கை. ஆனால் இவர்கள் வரலாறு, பிரதேசம், மொழி, காலச்சாரம், மரபு ஆகியவற்றில் வேறுபட்டவர்கள் என்பதே அந்த உண்மை ஆகும். ஆதிகாலத்தில் இருந்து (இரண்டாயிரம் ஆண்டுகளாக) இத்தீவின் ஆதிக்கத்தை இரண்டு வெவ்வேறு இனங்கள் தமதாக்கியவாறு ஆட்சி நடத்தி வந்ததும், அதாவது பிரதேசங்களைப் பொறுத்தவரை வளவை கங்கை தொடக்கம் சிலாபம் வரையான உட்பகுதிகளில் (தென்மேற்கு) சிங்களவரும், வடக்கு கிழக்கை தமிழர்களும் தமது இறைமை வலயங்களாகக் கொண்டு விளங்கினர். 16ம் நூற்றாண்டில் இருந்து அந்நியப்படையெடுப்பு நிகழ்ந்தபோது அதனை முதலாவதாக எதிர் கொண்டது தமிழர் இராச்சியமே. இதன் போது தமிழர்கள் அழிவதை சிங்கள இரச்சியம் விருப்புடனேயே வரவேற்றது. தமிழர் இராச்சியத்தினால் அச்சமுற்று இருந்ததே இதற்குக் காரணமாகும். அதாவது 15ம் நூற்றாண்டளவில் தமிழ் இராச்சியங்கள் சிங்களவரிடம் திறை வாங்கும் அளவிற்கு வலுத்திருந்தன. இந்த நிலையில் போர்த்துக்கேயர் வந்தது சிங்களவரிற்கு நல்ல காலம் என சிங்கள வரலாற்று ஆசிரியர் கலாநிதி ஜி.சி.மென்டிஸ் குறிப்பிட்டுள்ளார்.

1833ம் ஆண்டு தமிழ்த்தேசிய இனம் சிங்களத்தேசிய இனம் என்ற இரு இனங்களின் எல்லைக்கோடுகள் பிரித்தானிய குடியேற்ற வாதிகளால் அழிக்கப்பட்டு முழு இலங்கையை ஒன்றாக்கிய நிர்வாகம் கொண்டு வரப்பட்டது. அதன் பின்பும் இலங்கை சுதந்திரம் பெற்ற 1948 இன் பின்பும் தமிழர் சேர்ந்துவாழ விரும்பினர். எமது இனம் போர் விருப்புக் கொண்ட அல்லது, போர்வெறி கொண்ட இனம் அல்ல. ஆனால் கௌரவமும், தனித்துவமும் பாதுகாக்கப்படுவதற்காக போருக்குத் தம்மை தயார் படுத்துவதிலும் பின்நிற்பதில்லை. இதற்கு ஆதாரங்களாக தமிழ் இனத்தின் வரலாற்று எச்சங்களே சான்றாக உள்ளன. தமிழர்கள் தமது தனித்துவத்தையும் கௌவரத்தையும் பாதுகாக்க முற்படும் வேளை பிரிவினை வாதிகள் என்றும் போர் வெறியர் என்றும் முத்திரை குத்தப்படுகின்றது. பண்டைய போர் முறைகளுள் போர் முற்றுகை என்பது பிரதான கோட்டையினை அல்லது நகர் ஒன்றை முற்றுகையிடுவதன் மூலம் உறுதிப்படுத்தப்படும். இதன் போது மக்கள் இறுதியாக அணிதிரள்வர்.

வெற்றி அல்லது வீழ்ச்சி என்பது முடிவுகளாக இருக்கும். இன்று அப்படி அல்ல. எமது தேசத்தின் எல்லா உயிர்களும் எல்லா சடப் பொருட்களும் எதிரிக்கு சவாலாக இருப்பதால் எமது தேசமே முழுமையாக முற்றுகையிடப்பட்ட போர் வலயமாக எதிரியால் வடிவமைக்கப்பட்டுள்ளது. எமது எல்லைகள் வாழ்வாதாரங்கள் கௌரவம், தனித்துவம் மற்றும் மண்ணை இன்னமும் பற்றிப் பிடித்துக் கொண்டு இருக்கும் ஒவ்வொரு குடும்பத்தையும் குடிசைகளையும் இலங்கையின் இனவாதப் போர் முற்றுகையிட்டு இருக்கிறது. ஆனால் நாங்கள் அனைவரும் அந்த முற்றுகையை உடைப்பதற்கு இறுதியான அணிதிரட்டலில் ஒருங்கு சேரவில்லையே! ஏன்? பண்டைக்காலம் போல் ஒரு குறித்த இடத்தை மட்டும் முற்றுகை இட்டிருப்பின் எமது படைபலம் போதும். ஆனால் இன்று அப்படி அல்லவே. நாங்கள் இறுதியான ஓர் விரைதலிற்கு அணி திரளவில்லையே என்ற ஏக்கமானது கருத்து மாற்றித்தின் அவசியத்தினை உணர்த்துகின்றது அல்லவா.

மறுக்கப்பட்டதும், அழிக்கப்பட்டதும் (நூலக எரிப்பும், தமிழாராட்சி படுகொலை போன்றவை) எதிர்ப்பு தெரிவித்தவர்களை பயங்கரவாதிகள் என சிறையில் அடைத்ததும்.

இவ்வாறான அநாகரிகமான மிருகத்தனமான புதிய கருத்து மாற்றத்திற்கு இட்டுச் சென்றது. நாமும் இந்த புதிய முழுமையான கருத்து மாற்றம் அடைய வேண்டியதற்கு இதுவே சான்றுகளாகும்.

எமது எண்ணங்களும் செயற்பாடுகளும் எண்ணிக்கையில் அதிகமானவை. ஆனால், அதற்கான இடைவெளி அல்லது செயற்படும் பாதைகள் குறுகியதாகவே காணப்படுகின்றன. இடைவெளி இல்லாத இடத்திற்குள் பொதுவாழ்க்கை பற்றிச் சிந்திக்கவும் கருத்துணர்வுகளை உள்வாங்கவும் முடியாது. நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் கருத்துலகம் ஓர்

> **எமது இனம் இன்னமும் இவ்வளவாவது தனித்துவமாக வாழ்கின்றது எனில், எம்மவர் கௌரவமாக வெளிநாடுகளில் தலை நிமிர்த்த ஆரம்பித்து விட்டனர் என்றால் அதற்குக் காரணம் தனியொருவராக ஒரு துப்பாக்கியுடன் மக்களின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்த எமது தேசியத் தலைவரும் அவருடன் இணைந்தும் இற்றைவரை விரைந்தும் போராடிவரும் இளம் சக்திகளினதும் முழுமையான கருத்து மாற்றமே ஆகும்.**

எமது இனம் இன்னமும் இவ்வளவாவது தனித்துவமாக வாழ்கின்றது எனில், எம்மவர் கௌரவமாக வெளிநாடுகளில் தலை நிமிர்த்த ஆரம்பித்து விட்டனர் என்றால் அதற்குக் காரணம் தனியொருவராக ஒரு துப்பாக்கியுடன் மக்களின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்த எமது தேசியத் தலைவரும் அவருடன் இணைந்தும் இற்றைவரை விரைந்தும் போராடி வரும் இளம் சக்திகளினதும் முழுமையான கருத்து மாற்றமே ஆகும். இத்தகைய செயற்பாட்டினையே நாம் ஓர் முழுமையான கருத்து மாற்றமாகக் கொள்ளமுடியும்.

எமது இனத்திற்கு ஒற்றை ஆட்சி என்ற பேரில் இன ஒடுக்கல் (மொழியுரிமை, குடியுரிமை பறிக்கப்பட்டது) செய்யப்பட்டது.

சனநாயகம் என்ற பேரில் எமது நிலங்கள், கல்வி உரிமைகள் (குடியேற்றம், தரப்படுத்தல் போன்றவை) பறிக்கப்பட்டன.

சமத்துவம் என்ற பெயரில் இனக் கலப்பும், மொழிக் கலப்பும் ஆக்கிரமிப்பாகச் செய்யப்பட்டது.

சட்டம், ஒழுங்கு, நீதி என்ற பேரில் எமது தனித்துவம், கௌரவம் ஆகியன ஒடுங்கியபாதை வழியே சென்றுகொண்டிருக்கின்றது. ஒரு குறுகிய வட்டத்திற்குள் சுற்றிச் சுற்றி ஓடிக்கொண்டிருக்கிறோம். இதனையே மனப்போராட்டம் என்றும் கூறப்படுகிறது. எண்ணங்களின் மோதலே மனப்போராட்டம் ஆகும். எமது மனத்துள் போர் முற்றுகையினால் எங்கு செல்வோம், எப்படி வாழ்வோம் என்ற நாளாந்த வாழ்க்கை நெருக்கடிகளின் அழுத்தத்தால் குறுகிய வட்டத்திற்குள் எண்ணங்களை மோதவிட்டுக் கொண்டிருக்கிறோம். இதனால் குறுகிய முடிவுகளே எமக்குத் தோன்றும். நீண்ட, உண்மையான, பொதுவான ஓர் முடிவுகளே எமக்குத் தோன்றும். நீண்ட, உண்மையான, பொதுவான ஓர் முடிவு காண வேண்டுமாயின் நாங்கள் குறுகிய வட்டத்திலுள் இருந்து வெளியே வரவேண்டும். இதுவே போரிற்கான வாழ்வின் முதலாவது கருத்து மாற்றத்திற்கான அடிப்படை முயற்சி ஆகும். இதன் பின்பு சமூகம், அரசியல் போன்ற காரணிகளின் ஒத்துவராத கருத்துக்களை தெளிந்து அதற்கு மாறான கருத்து மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். இப்படியே வாழ்ந்தால் போரில் வெற்றி பெற முடியாது. எனவே போர் முற்றுகை வாழ்வும் முடிவுறாது.

போருக்கான வாழ்வுக்கு கருத்து மாற்றம் அவசியம் என்பதனை விளக்க முன்பு எமது சமூகத்தில் போராட்டம் தொடர்பான கருத்துலகத்துள் வாழ்வோரை வகைப்படுத்த வேண்டும். அதற்கு ஓர் அறிஞரின் கூற்று உதவியாக அமைகின்றது.

If a sick person belives himself to be well it is necessary first of all prest to him that he is badly mistaken

என்பது இந்தக் கூற்று. அதாவது நோயாளி ஒருவன் தான் நலமாக இருப்பதாக நம்புகின்றான் ஏனெனில், அது அவன் செய்கின்ற பெரிய தவறு என்பதை அவனுக்கு உணர்த்துவதே முதலாவது தேவைப்பாடாகும்.

இங்கு நோயாளி யார்? நலமாக இருப்பதாக நம்பிக் கொண்டிருப்பவர்கள் யார்? நோய் என்று தெரிந்தும் சிகிச்சைக்கு அஞ்சி துன்பப்படுபவர்கள் யார்? சிகிச்சை என்பது என்ன என்ற கேள்விக்கு விடை அறிவதன் மூலம் யதார்த்தத்தை புரிந்து கொள்ள முடியும்.

இரு இனங்களும் எப்போது ஒற்றை ஆட்சியின் கீழ் கொண்டுவரப் பட்டதோ (1833) அன்றில் இருந்து தமிழ் இனத்திற்கு அதன் தேசியத்தைப் பாதிக்கும் நோய் தொற்றிவிட்டது. இதனால் அல்லலுறும் இனத்திற்கு சிகிச்சையாக (பிரிந்து வாழ்தல் - தனிநாடு) தமிழீழமே என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. நோயினால் பீடிக்கப்பட்ட பின்பும் அதற்கு சிகிச்சை என்ன என்று தெரிந்தும் அதனைச் செய்யாது தாம் நலமாக இருப்பதாக நம்பி இருப்பவர்கள் அரச பயங்கரவாதத்துடன் சேர்ந்து இயங்கும் தமிழ்க் குழுக்களும், அரசியல் வாதிகளும் ஆகும். சிகிச்சைக்கு அஞ்சி நோயினால் துன்புறுபவர்கள் கடமையுணர்வு, போராட்டம் என தம்முள்போராடிக் கொண்டு முடிவெடுக்காது இருக்கும் இளம் சக்திகள்.

எமது வாழ்வைச் சுற்றிப்போர் முற்றுகையிட்டிருப்பதனை யாராலும் மறுக்க முடியாது. இத்தகைய சூழலில் நாம் கடந்தகால வரலாறுகளை நினைவுகளாக கொண்டு நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் எவ்வாறு செயற்பட வேண்டும், எத்தகைய கருத்துணர்வைக் கொண்டிருக்க வேண்டும் என்று சிந்திக்க வேண்டும். எமது நாளாந்த வாழ்வு ஓர் சங்கிலி வடிவில் செயற்பட்டுக் கொண்டிருக்கும். அது போருக்கான வாழ்வை அமைப்பதற்கும் முற்றுகையில் இருந்து மீள்வதற்கும் வழிகளைத் தர மாட்டாது. நேற்றிக்கு நேரே கூறுவ நாமின் மாற்றங்களுக்குட்படாது நாங்கள் இப்படியே வாழ்வதால் போரில் வெற்றிபெறமுடியாது. அத்துடன் எம் முற்றுகை இடப்பட்ட வாழ்வும் முடிவுறாது.

(மிகுதி அடுத்த இதழில்)

எனக்கு சின்னனிலே இருந்து அவனிலை தனி விருப்பம் இப்பவும் எனக்கு நல்ல ஞாபகம் இருக்கு. அவன் இப்பவும் ஈருருளியிலதான் வருவான். விளக்கேற்ற திறந்து உள்ள வர வேற்பறைக்குள் நுளையும் மட்டும் ஈருருளியை விட்டு அவன் இறங்கவேமாட்டான். அம்மாவந்து இதில 'இரு தம்பி' என்டால்த்தான் வந்திருப்பான்.

எங்களோடயெல்லாம் செல்லமாகக் கதைப்பான். சேர்ந்து விளையடுவான். ஆனா கிட்டப்போனால் மட்டும் எட்டப் போயிருவான். அவன்ர போக்கே எனக்குப் புரியாது. சாரமும் சேட்டும்தான் அவன்ர உடையாக எப்பவும் இருந்தது. சிலவேளை பள்ளியாலை நான் நடந்து வரேக்க என்னை ஏத்திவந்து வீட்டிலையெல்லாம் விடுவான். பாடமெல்லாம் நல்லாச் சொல்லித்தருவான். வீட்டில சம்பலும் சோறுமென்ன, சொதியோட குடுத்தாலும் சந்தோசமா வாங்கிச் சாப்பிடுவான்.

எல்லா நாளும் அவன் எங்கட வீட்ட வரவேணுமென்ட விருப்பம் ஆனா ஒவ்வொரு தவணைப்பரீட்சை முடிவில மட்டும் அவன் வரக் கூடாதென்டு வேண்டாத தெய்வமேயில்லை. என்டாலும் அவன் வந்திடுவான். வாசலில வரேக்கையே 'ரிப்போட்டை எடுத்து வெளியில வையுங்கோ' கட்டளை பிறந்து விடும். நடுங்கி நடுங்கித், தான் ரிப்போட்டைக் காட்டுவன். எந்தப் பாடத்திற்கு புள்ளிக்குறைவோ அந்தப் பாடப்புத்தகத்தை தூக்கி தலையில வைக்கச் சொல்லிப்போட்டு ஒரு மூலையில முட்டுக் காலில இருத்தி விட்டுருவான். மணிக் கணக்கா அந்த தண்டனைய அனுபவிச்ச பிறகு தான் எனக்கு விடுதலை கிடைக்கும். அந்த நேரத்தில மட்டும்தான் அவனை எனக்குப் பிடிக்காது.

மற்ற வேளையெல்லாம் அவனிற்கும் எனக்கும் உள்ள பாசப்பிணைப்ப யாராலும் புரிந்து கொள்ளமுடியாது.

அவன்ர அம்மா அப்பா யாரென்டெல்லாம் எனக்குத் தெரியாது. நான் கேட்டாலும் அவன் சொல்ல மாட்டான். எப்பவுமே அவன் சிரிச்ச முகத்தோடதான் இருப்பான். கலகலப்பாகத்தான் பேசுவான். ஆனா வெளித்தோற்றத்திற்கு சிரிச்சுக் கதைச்சாலும் உள்ள எந்த நேரமும் திக்கெட்டும் புலனை ஓட விட்டிட்டேயிருப்பான். தூரத்தே வாற வாகனங்களின்ர இரைச்சல வச்சுக்கொண்டே வாறது என்ன வாகனம் என்பதை இனங்கண்டு விடுவான். சில வாகன இரைச்சல கேட்டால் மட்டும்தான் அவன்ர முகத்தில பதற்றத்தைக் காணலாம் மற்றும் படியெல்லாம் அவன் அமைதியாத்தான் இருப்பான்.

எனக்கு அவன் யார்? ஏனிப்படி எங்கட வீட்ட அடிக்கடி வாறான்? இரவில அப்பாவோடயெல்லாம் தாழ்ந்த குரலில அமைதியாக கதைக்கிறது ஏன் என்டெல்லாம் தெரியாது.

ஒரு நாள் நடுச்சாமம் இருக்கும், நித்திரையாகக் கிடந்த என்ன எழுப்பி,

'மாமா போயிற்று வாறன் பிள்ள குழப்படி செய்யாம இருக்க வேணும் நல்லாப் படிக்கவேணும்.' கன்னத்தில தட்டிப்போட்டு போனவன். அது கனவு மாதிரித்தான் இருந்தது வெளியால வந்து பார்த்தன் அவன் மாதிரி கனபேர் நின்டவை. அவை ஏன் வந்தவை எங்க போகப்போகினம் என்டெல்லாம் எனக்குத் தெரியாது. எனக்கு எல்லாம் புதுமையாக இருந்தது. அதுக்குப் பிறகு அவனை நான் கன காலமாகக் காணேல்ல.

என்ர மனத்தில அவன்ர நினைவுகள் ஆழமா பதிஞ்சதால நாளும் அவன் வருவான் வருவான் என எதிர்பார்த்து ஏமாற்றமாகவே நாட்கள் நகர்ந்தன.

எங்கட மண்ணிலும் நிறைய மாற்றங்கள் அமைதி என்றபோர்வையில் வந்த இந்தியப் படைகளின் பாதம் பட்டு எங்கட மண் இரத்தத்தால குளிப்பாட்டப்பட்டுக் கொண்டிருந்தது.

இந்த நாட்களில நாய்கள் குரைச்சாலெல்லாம் இதயம் நின்று விடும். எந்த வீட்டிற்கு யமன் நுழையப் போகிறானோ என்கிற ஏக்கத்தில் உடலெல்லாம் வியர்த்துக் கொட்டும். இரவில வந்து பிடிச்சிட்டுப் போறாக்கள எப்படியும் விடிய வீதியிலோ கடற்கரையிலோ பிணமாகக் காணலாம்.

அப்பிடித்தான் அண்டைக்கும் இடைவிடாம நாய் குரைச்சதில பயத்தால உடலெல்லாம் விறைச்சுப் போட்டுது. நாய் குரைப்புக்கள் ஓய்ந்து இப்ப எங்கட வீட்டு நாய் மட்டும் சத்தம் போடாமல் ஓலமிட்டது.

அதற்கும் பயத்தில சத்தம் வரவில்லையோ என எண்ணும் போதே இனி வர இருக்கும் அந்தக் கணப்பொழுதை எதிர் கொள்ளக் காத்திருந்தேன்.

'அண்ணை'

அந்த அமைதியான அழைப்பு எங்கேயோ கேட்டகுரல் ஓ இது இது அவனுடைய குரல்தான்.

வீட்டுக்காரரிற்கும் வந்தது யாரென்று புரிந்து விட்டது. கதவு திறந்தது அப்போது நான் கண்ட காட்சி இது நிஜமா பயத்தால் விறைத்த உடல் இப்போது மகிழ்ச்சிக்களையால் அசைய மறுத்தது. இப்பவும் அதே சறக்கட்டுத்தான். ஆனால் அவன் கைகளில் இருந்ததைக்கண்டபோது தான் அவன் யார் என்பதை முதன் முதலாக என்னால் உணர முடிந்தது. அன்றிலிருந்து அவனிடத்தே வைத்த மரியாதை இன்னும் ஒரு படி உயர்ந்து நின்றது.

எனினும் பலத்த மாற்றங்கள் நானும் பெரியவளாக வளர்ந்துவிட்டேன். என்பது அவனிற்கும் பலத்த ஆச்சரியத்தைக் கொடுத்திருக்க வேணும்.

'நீ நல்லா வளர்ந்திட்ட' என்ற அவனது வார்த்தைகளின் உண்மையை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

அந்தச் சில நொடிகளைத் தொடர்ந்து மீண்டும் நாய்களின் குரைப்பு. வாகனங்களின் இரைச்சல் இப்போது பயத்தால் இதயமே நின்று விடும் போலிருந்தது. ஆனால் அவன் மட்டும் பதற்றப்பட வேயில்லை. சில கணங்கள்...

'ட் டொமார்...''

அந்த வெடி ஓசையின் அதிர்வு.. இனிப் பயப்படத் தேவையில்லை. என்பதை உணர்த்துவது போலிருந்தது. 'அண்ணை இனி நான் இதிலை நின்டா உங்களுக்கும் ஆபத்து எனக்கும் ஆபத்து நான் வாறன்' அவன் வெளியேறினான்.

எத்தனையோ வருடங்களின் பின் வீடு தேடி வந்தவன் ஒரு வாய் பச்சைத் தண்ணீர் கூட குடிக்காமல் அவன் போவதையே பார்த்துக் கொண்டு நின்றேன் துப்பாக்கிகளின் சடசடப்பு சத்தம் என்னை நிஜவாழ்விற்குள் புகுத்தியது.

'கடவுளே அவனிற்கு ஒன்றும் நடக்கக் கூடாது' வேண்டாத தெய்வங்களையெல்லாம் துணைக்கு அழைத்துக் கொண்டேன். ஆனால் தொடர்ந்த சத்தங்கள் அவன் அந்த யமன்களிடம் இருந்து தப்புவதற்கு வழியில்லை என்பதை உறுதிப்படுத்துவன போலிருக்க என்னையறியாமலே கண்கள் கண்ணீரைச் சொரிந்தன.

அவனது கழுத்தில் தொங்கிய நஞ்சுமாலை அவன் கொண்ட இலட்சியத்திலிருந்து ஒரு போதும் விலகமாட்டான் என்பதை எடுத்துக்காட்டியது.

அவன் காயப்பட்டாலும் நிச்சயமா எதிரியிட்ட பிடிபட மாட்டான். என்பது மட்டும் எனக்கு தெளிவாகத்தெரிந்தது.

அமைதிப் படைகளும் மாபெரும் உண்மையைப் புரிந்து கொள்ளத் தொடங்கிய நேரம் அடிக்கடி நடக்கும் புலிப்பாய்ச்சலுக்கு முகம் கொடுக்க முடியாமல் அவர்கள் திணறத்தொடங்கியபோது

'தமிழீழத்தில் காற்றிற்கும் கை முளைத்துவிடுமோ...' என்கின்ற ஏக்கத்தில தங்கள் தாய்நாடு திரும்பத் தொடங்கியிருந்தனர்.

அன்றைய வைகறைப் பொழுதில் மயிர்க் கூச்செறியும் அந்தச் சம்பவம்

நீலக்கடலின் ஓரத்தே வரிப்புலிகள் பாயும் புலிக்கொடியை கையில் ஏந்தியபடி அணிவகுத்து வந்த அந்தக் காட்சி

ஓ.. அது.. அது.. அவன்.. அவன்.. அவனேதான் அப்படியென்டால் அண்டைக்கு அவனிற்கு ஒன்டும் நடக்கேல்ல. ஆனால், அவனில் பலமாற்றங்கள் சறமும் சேட்டுடனும் திரிபவன் இன்று வரிப்புலிக்குள் மாறியிருந்தான்.

அவனது நடை எப்பவும் துள்ளிக் குதிக்கும் அந்த நடையில் கூட சிறு மாற்றம். இடதுகாலில் எங்கேயோ விழுப்புண் ஏற்றிருக்க வேண்டும். இல்லையென்றால் இடது கால் துண்டிக்கப்பட்டிருக்க வேணும். முகத்தில் கையில் கூடச் சிறிய சிறிய காயவடுக்கள் ஆனால் கருணை பொழியும் அந்தக் கண்களிலும் தீட்சண்யமான முகத்திலும் எந்த வித மாற்றமும் இல்லை.

அந்தப் புதிய உதயப் பொழுதில் பட்டொளி வீசிப்பறந்த புலிக்கொடியை ஏற்றிவைத்தது அவன் தான்.

அன்றும் அவன் எங்கட வீட்டிற்கு வந்தான் ஆனால் முந்திய போல ஈருருளியிலை அப்பாவுடன் கதைத்துக் கொண்டிருந்தான். என்னைக் கண்டதும் திரும்பி பார்த்தான்.

"என்ன படிக்கிறீங்கள்" என்னிடம் அவன் கேட்டான்.

'நான் உயர்தரத்தில கலைப்பிரிவில படிக்கிறன்; இப்பொழுதெல்லாம் அவனோடு கதைப்பதற்குள் வெட்கம் என்னை ஆட்கொண்டுவிடும்.

இப்படித்தான் ஒரு நாள் பாடசாலையில் நடைபெற்ற ஒரு விழாவிற்கு சிறப்பு விருந்தினராக அவன் வந்தான். அந்த விழாவில் அவன் பேசியது என்னை குற்றவாளிக் கூண்டிற்குள் தள்ளியது போலிருந்தது.

இது எங்கட மண் காலங்காலமாய் நாங்கள் வாழ்ந்த சொந்த மண். இன்று அந்நிய ஆக்கிரமிப்பாளர்களின் பாதம் பட்டு சிதைந்து, சீரழிந்து சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கிறது. எல்லாப்பக்கத்தாலும் எதிரி எம் மக்கள் மீது திட்டமிட்ட இன ஒடுக்கு முறையை மேற்கொண்டு வருகிறான். கொஞ்சங்கொஞ்சமாய் எமது நிலம் பறிபோய்க் கொண்டிருக்கிறது. நாளும் எம் மக்களின் குடியிருப்புக்கள் மீது குண்டு வீச்சுக்களாலும் எறிகணை வீச்சுக்களாலும் கருவிலிருக்கும் குழந்தைகளிலிருந்து முதியோர்வரை பலிக்கடாக்களாக்கப்பட்டு வருகிறார்கள். எமது தமிழினம் அழிக்கப்பட்டுக் கொண்டு வருகிறது.

இந்த நிலையில் எங்கட மண்ணை மக்களை காக்கின்ற ஒப்பற்ற உரிமைப் போராட்டத்தை எமது தலைவர் வழிப்படுத்திக் கொண்டிருக்கிறார். இதில பங்கேற்கும் உரிமை தமிழனாய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் உண்டு. இந்த வகையில் மண்ணை மீட்கும் புனிதப்போரில் தம் இன்னுயிர்களை அர்ப்பணித்த இந்த மாவீரர்களும் தாம் சாகின்ற கணத்தில கூட தாம் விட்டுச் செல்கின்ற பணியைத் தொடர நாளை ஆயிரம், ஆயிரம் இளைஞர் யுவதிகள் அணிவகுப்பார்கள் . அவர்களால் நாளை எம் மண் மீட்கப்பட்டு விடும் என்ற நம்பிக்கையில் நாங்களும் இறுதிவரை உறுதி குலையாது போராடிக் கொண்டே இருக்கிறோம்.

இந்த விழா நிறைவடைந்து அவன் புறப்பட்ட போது 'நானும் வரப்போறன்...'

மெல்ல அவனுக்கு முன்னால் போய் நின்றேன். 'நல்லா யோசிச்சா முடிவெடுத்தனீங்கள்' அவன் கேட்டபோது. 'கடமையைச் செய்கிறதிற்கு என்ன யோசிக்க வேண்டியிருக்கு' அமைதியாக) பதிலளித்தேன். 'அம்மா அப்பாவைக்கு நீங்க ஒரு பொடி பிள்ளை... அவையை பார்க்கிற கடமை உங்களிற்கு இல்லையே...' அவன் என் நிலையை அறிய முற்படுகிறான் என்பது மட்டும் எனக்குத் தெளிவாகத் தெரிந்தது.

'அம்மா... அப்பாவ சந்தோசமாக நங்கட சொந்த மண்ணில வாழ வைக்கப் பார்க்க எனக்கு விருப்பம். அது நாம் முதல் எங்கட மண்ணை மீட்டாப் பிறகு பெற்றோரை சந்தோசமா வாழ வைக்கலாம்' என நான் சொன்னபோது 'சரி வாங்கோ...' அவனோடு வாகனத்தில் ஏறிக்கொண்டேன். சிறு வயதிலிருந்தே அவன் மடி மீது வளர்ந்த நான் இன்று அவன் இலட்சியங்களைப் பின் பற்ற அவனோடு செல்கிறேன் நினைக்கும் போதே மனம் பூரிப்படைந்தது. இப்பொழுது நானும் அவனைப் போலத் தான். எனக்கும் அவனிற்கும் ஒரே தலை

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

-பிரமிளா-

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

இரு வாரத்துக்கு ஒருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

அன்புள்ள தமிழீழச் சகோதரர்களே!

சந்திரிகாவின் புதிய நாடகத்தின் பெயர் 'சமசந்தர்ப்பம்'. 'சமாதானத்திற்கான யுத்தம்' - 'பாதைதிறப்புக்கான யுத்தம்' என்றெல்லாம் புதுப்புது நாடகத் தலைப்புக்களை உலகிற்கு பிரபல்யப்படுத்தி பேசி தமிழ் மக்கள் மீதான தனது முற்றுகை யுத்தங்களையும் பொருளாதாரத் தடைகளையும் நியாயப்படுத்தி வந்த சந்திரிகா, அவைகளுக்கு நடுவே இடைக்கிடை அரசியல் தீர்வுப்பொதி ஒன்றை தான் தயாரித்து தமிழ் மக்களுக்கு அள்ளி வழங்கப் போவதாகவும் உலகிற்கு கரடிவிடுவது உலகறிந்த உண்மை. இந்த தீர்வுத் திட்டங்களை சிறீலங்காப் பாராளுமன்றப் படியேறக்கூட சிங்கள பௌத்த பேரினவாதிகள் அனுமதிக்க மாட்டார்கள் என்பது நடைமுறையில் உலகு கண்டுகொண்ட உண்மை. இதனால் இந்த நாடகங்கள் எல்லாமே அம்பலமான நிலையில் சந்திரிகா மேடையேற்ற ஆரம்பமாகியுள்ள புதிய நாடகம்தான் 'சமசந்தர்ப்பம்' மசோதா.

'சமசந்தர்ப்பம்' என்பது எல்லோருக்கும் சமவாய்ப்புக்களை அளிப்பதாகும். ஆனால் சிறீலங்காவின் அரசியல் சாசனம் சிறீலங்காவில் பௌத்தத்திற்கும் சிங்களத்திற்கும் முதலிடம் முன்னுரிமை என்ற பொன் வாசகங்களை சுமந்து நிற்கும் சிங்கள பௌத்த பேரினவாதப் பிரகடனம். அந்த அரசியல் அமைப்பின் கீழ் சமசந்தர்ப்பம் என்ற சொல்லுக்கே அர்த்தமில்லை.

'சமசந்தர்ப்பம்' நிலைபெற சட்டமும் ஒழுங்கும் நீதித்துறைகளும் பக்கசார்பற்றுத் தொழிற்படல் வேண்டும். ஆனால் சிறீலங்காவில் தமிழ் மக்களின் பிரச்சினையே அதனுடைய சட்டமும் ஒழுங்கும்தான். சிறீலங்காப் படைகள் வைத்தவையே தமிழர்களைப் பொறுத்தவரை அங்கு சட்டம். சிறீலங்காப் படைகள் செய்ய நினைப்பனவே தமிழர்களைப் பொறுத்தவரை ஒழுங்கு. சிறீலங்காப்படைகள் தமது ஆக்கிரமிப்பினை உறுதிப்படுத்த எடுக்கும் நடவடிக்கைகளே தமிழர்களைப் பொறுத்தவரை நிர்வாகம். இவ்வாறான ஒரு இராணுவ ஆட்சியினை ஜனநாயகப் போர்வையில் நடாத்திவரும் சந்திரிகா தனது ஆட்சியில் ஜனநாயகம் செயற்படுவது போல் 'சமசந்தர்ப்பம்' என்ற புதிய மசோதா நாடகத்தை ஆரம்பிக்கின்றார்.

இறுதியாகத் தமிழர்கள் தமிழீழத் தாயகத்தில் சமசந்தர்ப்பம் உள்ளவர்களாக வாழ்வதைத் தடுப்பது சந்திரிகாவின் படைகளே. இந்தப் படைகளின் விலகலே தமிழர்களுக்கு சமசந்தர்ப்பத்தை அளிக்க கூடுமான ஒன்று. அதனை தடுக்கும் சந்திரிகா தானே 'சமசந்தர்ப்பம்' என்ற சொல்லை உச்சரிக்கக்கூட அருகதையற்றவர். ஆயினும் சமசந்தர்ப்பம் என்ற ஒரு மாயையை சந்திரிகா உச்சரித்து உலகில் தமிழர்களுக்கு திரண்டுவரும் ஆதரவை திசைதிருப்ப முயற்சிக்கிறார் என்பதே உண்மை. இதற்காக ஐரோப்பிய-அமெரிக்க அரசியல் சிந்தனைகளில் கவர்ச்சிச் சொல்லாக விளங்கும் சமசந்தர்ப்பம் என்ற சொல்லை சந்திரிகா தனது புதிய நாடகத்தின் தலைப்பாக்கி வருகிறார். ஆயினும் இன்று உலகிற்கு சிறீலங்கா அரசாங்கம் தமிழர்களுக்கு சமசந்தர்ப்பத்தை ஒரு நாளும் அளிக்காது என்பது திண்ணமாகத் தெரியும். ஆதலால் சந்திரிகா தமிழீழ மக்களின் போரெழுச்சிக்கு எதிராக உலகநாடுகளின் ஆதரவைத் தன் பக்கம் திருப்ப எடுக்கும் இம்முயற்சியினை உலகு நம்பத்தயாரில்லை. இந்த உண்மையை உலகிற்கு இறுக்கமாக இடித்துரைக்க வேண்டிய பொறுப்பு புலம்பெயர் தமிழராகிய நம்முடையது.

வணக்கம்
அன்பின் ஆசிரியர்
(07.10.1999)

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

அவன்...

வன்தான் கொள்கைகள் இலட்சியங்கள் எல்லாம் ஒன்றுதான் ஆனால் நான் போராளியாய் வந்த பிறகு அவனை இன்னும் காணவில்லை.

ஒரு நாள் என்னைப் பார்ப்பதற்காக அவன் எனது முகாமிற்கு வந்திருந்தான்.

"போராட்டத்துக்கும் தலைவருக்கும் விசுவாசமாயிருக்கும் எண்டைக்கும் விசுவாசமா இருக்கவேணும்... எப்படியும் வாழலாம் என்டிருக்கக்கூடாது. இப்படித்தான் வாழ வேண்டும் என்டு ஒரு கொள்கையை வைச்சு வாழப்பழகவேணும்.."

அவனது வார்த்தைகள் எல்லாம் அறிவுரைகளாகவேயிருந்தன.

அவன் புறப்பட்டான்.

"நான் இனி உன்னைச் சந்திக்க வரமாட்டன் நான் போயிற்று வாறன்..." போகும் போது திரும்பிப்பார்த்துவிட்டுச் சென்றான்.

சில நாட்களின் பின் மாபெரும் உண்மைச் செய்தி ஒன்று என்னை வந்தடைந்தது.

ஆனால் என்னால் வாய்விட்டு அழமுடியவில்லை...

"வேர்கள் வெளியில் என்னடைக்கும் தெரியாது" என்கிற உண்மை மட்டும் எனக்குப் புரிந்தது. எனக்குள்ளே மௌனமாய் அழுதேன்.

சிறு வயதிலிருந்தே அவனையும் அவனது கொள்கைகளையும் பிடித்த எனக்கு இப்போது அவன் தேர்ந்தெடுத்த வழியும் பிடித்திருந்தது. அந்த வழிகாட்டுக்கும் பின்னால் நடப்பதென்ற உறுதியோடு விடுமுறையில் வீடு சென்ற எனக்கு வீட்டார்கள் கேட்ட முதலாவது கேள்விக்கே பதில் சொல்லத் தெரியாது திணறினேன்.

"அவன் என்ன இஞ்சால கனநாளாக் காணேல்ல.."

"அவன் வருவான்.."

ஒரு சொல்லிலேயே பதிலளித்துவிட்டேன். அவன் வருவான். அதே போல இனி நானும் வருவேன்.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

உளப்பலத்தால்...

அதிலும் மணவாளன்பட்டமுறிப்புத் தாக்குதல் வந்ததும் நினைவுகள் அதை விட்டு நகரவேயில்லை.

எதிரி கைப்பற்றிவைத்திருக்கும் இராணுவ பிரதேசத்திற்குள்தான் அவர்களிற்கான இலக்கு. அதுவும் அதியுயர் பாதுகாப்பு வலயம் எனக்கருதி அங்கேயே அந்த உலங்குவானூர்தி தரையிறங்கி ஏறியது. அந்த உலங்குவானூர்தியை தாக்கி அழிப்பதே அத்தாக்குதல் அணியின் நோக்கமாகவிருந்தது.

கொமாண்டோப் பாணியில் சென்று இலக்கைத் தாக்குவது. அது சாத்தியப்படாவிட்டால் கரும்புலித் தாக்குதல் மூலமாவது அந்த இலக்கை அழித்துவிட வேண்டும் என்பதற்காகவே கரும்புலி வீரர்கள் அந்தத் தாக்குதலுக்குத் தெரிவுசெய்யப்பட்டு இருந்தார்கள்.

அதுவோ மிகவும் வித்தியாசமான இலக்கு. முன்திட்டமிடலோ மாதிரிப் பயிற்சியோ இல்லாது இலக்கைச் சென்றடைந்து அதைப் பார்த்து அங்குநிலவும் களச் சூழலுக்கேற்ப அணித்தலைவரே முடிவெடுத்துச் செயற்பட வேண்டும். அதனால் அந்தக் கரும்புலிகள் அணியிற்கு குமுதனே தலைமைதாங்கிச் சென்றிருந்தான்.

தலைவரிற்கு குமுதனின் வழிநடத்தலில் அதிக நம்பிக்கையிருந்தது. ஏனென்றால் குமுதன் மெய்ப்பாதுகாப்புப் பணியேற்று தலைவருடன் நெருங்கி நின்ற நாட்களில் எல்லாம் அவனது ஒவ்வொரு அசைவையும் தலைவர் நேரே கவனித்தார்.

அப்போது அவனிற்குள் இருக்கும் வழிநடத்தும் ஆற்றலை தலைவர் நன்கு அறிந்திருந்தார். எனவேதான் இந்தத் தாக்குதல் அணியை அவன் தலைமையிலேயே அனுப்பி வைத்திருந்தார். இலக்கினை நோக்கி கரும்புலிகள் அணி நகர ஆரம்பித்த கொஞ்ச நேரத்திற்குள் எல்லாம், வானம் பிரிந்து விட்டதைப்போல மழை வாரிப் பொழிந்துகொண்டிருந்தது.

உடையோடு சேர்ந்து நனைந்துபோயிருக்கும் உடலுக்குள்ளால் ஊசிபோல உள் நுழையும் குளிர் உடலின் ஒவ்வொரு கலத்தையும் நடுங்கவைத்தது.

தரையில் சாய்ந்துகொள்ளவோ, இருக்கவோ முடியாது. ஒரே சேறும் தண்ணீரும் நிறைந்திருந்தன. பேணிகளிலும், பைகளிலும் அடைக்கப்பட்ட உணவுகளைத்தவிர வேறொரு சூடான உணவு வகைகளும் இல்லை. இவ்வாறு சிக்கல் நிறைந்த சூழலில்தான் குமுதனிற்குள் மறைந்திருந்த அந்த நோய் வெளியே வரத்தொடங்கியது.

குமுதனால் ஒரு மூச்சைக்கூட சிரமம் இன்றிவிட முடியவில்லை. ஒவ்வொரு மூச்சையும் உள் இழுத்து வெளிவிடுவதற்கு ஒரு போராட்டமே நடத்தவேண்டியிருந்தது. குந்தியிருந்தான். குனிந்துநின்றான். கைகளைத் தலைக்கு மேல் உயர்த்தினான். இப்படி ஒவ்வொரு மூச்சுக்கும் சிரமப்பட்டாலும் தனக்கு இந்த நேரம் வந்த நோய் யாருக்கும் தெரிந்துவிடக்கூடாது என்ற பெரும் சிரமத்தின் மத்தியிலும் அதைத் தனக்குள்ளேயே மறைக்கமுயன்றான்.

இந்த நேரத்தில் தன்னைப்பற்றியோ தனது வருத்தத்தைப் பற்றியோ சிந்திப்பவனாக இல்லை. அவனது நெஞ்சிற்குள் கனத்ததெல்லாம் அந்த இலக்கை எப்படியும் அழித்துவிட வேண்டும் என்பதே.

இத்தனை சிரமங்களையும் பொருட்படுத்தாது இலக்கை அழித்துவிட வேண்டும் என்பதை மட்டுமே சுமந்து அந்த இலக்கை அழித்துவிட்டு வரும்வரையும் தனது நோயினைப்பற்றி யாருடனும் கதைக்கவேயில்லை. பின் மெல்ல மெல்ல கதை தெரிய வந்த போது அவனது உறுதியும் தாயகப் பற்றும் பளிச்சென்று வெளித்தெரிந்தது.

ஆனையிறவு தளத்திற்குள் தாக்குதல் ஆரம்பிக்கும் நேரம்வரை காத்திருந்த கரும்புலிகளை அதற்கான நேரம் அண்மிக்கக் குமுதனின் கட்டளையோடு தாக்குதல் ஆரம்பமானது.

இடியும் மின்னலும் தரையில் இருந்து பிறப்பெடுப்பதைப்போல சத்தமும் தீச்சுவாலைகளும் மண்ணில் எல்லா முனைகளிலிருந்தும் எழுந்தது.

அமைதியும் இருளும் கருக்கலைய ஆனையிறவு படைத்தளத்தின் மையத்தளம் புதிய சமரரங்காய் கருவுற்றிருந்தது.

கண்ணிற்குத் தெரியும் கறுப்பு உருவங்கள் எல்லாம் தங்கள் எதிரிகள் என்று இருட்டில் எல்லா இடங்களிலும் இராணுவம் சுட்டுக்கொண்டிருந்தது.

தாக்குதல் ஆரம்பித்த சில கணங்களுக்குள் கரும்புலிகள் அணி அவர்களிற்கு வழங்கப்பட்ட இலக்குகளை அழித்துவிட்டு திட்டத்தின்படி பின்வாங்கிக்கொண்டிருந்தார்கள்.

இந்த வேளையில்தான் குமுதன் விழுப்புண் அடைகிறான். அவன் விழுப்புண் அடைந்தாலும் நிதானத்தை இன்னும் இழந்துவிடவில்லை. களநிலைமைகளுக்கு ஏற்றதுபோல் கட்டளைகளை வழங்கிக் கொண்டிருந்தான்.

இப்போதெல்லாம் குமுதன் இன்னும் ஒரு தோழனின் கைத்தாங்கலிலேயே பின்னிற்கு நகர்ந்துகொண்டிருந்தான். சிறிது நேரத்தில் குமுதனைக் கைத்தாங்கலாகத் தூக்கி வந்த தோழனும் விழுப்புண் அடைந்துவிடுகிறான்.

குமுதனிற்குத் தெரியும் இன்னும் கொஞ்சநேரத்தில் நினைவிழந்துவிடப்போகிறேன் என்று. இறுதியாய் கழிகின்ற ஒவ்வொருகணத்திலும் தனது சிறு அசைவைக் கூட தேசத்திற்கு பயனுள்ளதாகச் செய்துவிட வேண்டுமெனத் துடித்துக் கொண்டிருந்தான்.

அணிகள் அனைத்தையும் பின்வாங்குவதற்கேற்ற ஒழுங்குகளைச் செய்துவிட்டு விழுப்புண் பட்டாலும் பின்னிற்கு குமுதனையும் தூக்கிச் செல்வதற்காக நின்ற தோழனைப் பார்த்து "மச்சான் இன்னும் கொஞ்ச நேரத்தில் நான் சாவை அணைக்கப்போறன். நீ கட்டாயம் வெளியேபோய், இதைச் நடந்ததை சொல்லவேண்டும். எத்தினை இலக்கை அழிச்சனாங்கள், இன்னும் எத்தினை இலக்கு இருக்குதெண்டு சொல்லு. அது இன்னொரு சண்டைக்கு உதவும்."

அடுத்த சில மணித்துளிகளில் தனது சாவைத் தானே தீர்மானிக்கப்போகும் அந்த வீரன் சொல்லிய சேதி இது. எப்படி அவனால் முடிந்தது? எதிரிகளின் இடைவிடாத தாக்குதலுக்கும் மத்தியிலும் தன் சகபாடிகளான தோழர்களை இழந்துவிட்ட நிலையிலும் ஏற்கனவே பலவீனமான அவனது உடல் விழுப்புண் அடைந்த வேதனையால் சோர்ந்துவிட்ட போதும் எதைப்பற்றியுமே சிந்திக்காது அந்த இறுதிக் கணத்திலும் தனது அண்ணையைப் பற்றியும், தனக்கு வழங்கப்பட்ட கடமையைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருக்கும் அவன். இதுவரை காலமும் இலக்க வாழ்வின் ஒவ்வொரு மணித்துளியையும் எவ்வளவு பயனுள்ளதாக செலவு செய்திருப்பான் என்பதை எந்தத் துன்பமும் எவ்வளவு தூரம் எமது தாயகத்தின் பற்றுணர்த்தி உழைத்திருப்பான். குமுதன் கூறிவிட்ட சேதியைச் சொல்லி விடவேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காகவே முகாமைவிட்டு பல சிரமங்களையும் பொருட்படுத்தாது வெளியேறிய தோழன், குமுதன் சொல்லிவிட்ட சேதியைச் சொல்லியபோது குமுதன் காவியமாகிவிட்டான்.

அவன் சொல்லிவிட்ட சேதியே இன்னுமொரு தாக்குதலுக்கு பக்கபலமாக அமைந்துவிட்டது என்று எண்ணும்போதெல்லாம் அந்த இளைய வீரனின் முகமே கண்களுக்குள் தெரியும்.

அவன் என்றைக்கும் வாழுகின்ற வரலாறு.

வாழ்வான் தமிழன் இல்லையேல்...... விடுதலைக்காக வீழ்வான் தமிழன்!

பாதைமீதேறிப் பரவியேவந்த
பகைவரைத் தடுத்தனர் புதல்வர்.
சீதளக்காற்றில் தீயெழ வந்தோர்
திகைத்திடப் பொருதெனர் மகளிர்.
பூதலம் வியந்து போனது; வீரம்
புலர்ந்திட நின்றது தாய்மண்.
மாதவம்செய்த மண்ணடா அள்ளி
மார்பினிற் பூசடா தமிழா

* * *

எத்தனைக்கென்றுதான் அழுவதெம் வாய்கள்.
எத்தனை காலத்திற்கு நீரிறைப்பது கண்கள்.
சீறிச்சீறியே மூக்குகள் சிவந்து போயின
சோகம் கீறிய கோடுகள் முகத்திலும்
வேகம் ஆறிய கால்கள் நிலத்திலுமாக
சடமாய் நடக்கின்றன எம் உடல்கள்
கேள்விக்குறியாய் வளைந்தோமெனினும்
நாளைக்கு நாமேதான் பதிலென்பதில் வெகுசந்தோசம்.
நவீன உலகிருந்து எட்ட இருந்தாலும்
கால நீரோட்டத்தில் கால்கழுவி
வாழாப் பிறவிகளெனினும்
விடுதலையின் திசையில் கிட்டவுள்ளோமென்பதில்
மெத்தமகிழ்ச்சி
பசியால் நிறைந்துளது வயிறு
எமக்கிப்போ பசிப்பதேயில்லை.
ஊறிஊறி வெளியே பெருகி
நயனக்கிணறுகள் ஊற்றடைத்துவிட்டதால்
எமக்கிப்போ கண்ணீரே வருவதில்லை.
சாவும் நாமும் ஒரேபடுக்கையிற்தான் சயனம்.
ஆக; சாவெமக்குச் சகஜமாகிவிட்டது.
எமன் பயம்கூட எமக்கில்லை.
என்னதான் நடந்துவிடும்?
மிஞ்சிமிஞ்சிப்போனால் உயிர்போகலாம்
அட! அதற்கேன் அச்சமுறவேண்டும்.
"போதுமுயிர் இந்தப் பொன்னாட்டின் விடுதலைக்காய்
போகுமெனில் அந்தப் புனிதங்கள் கோடிபெறும்"
இங்கே உச்சரித்துக்கொள்ளும் ஒவ்வொரு வாயும்
தத்தெடுத்துக்கொண்டது இந்த வரிகளைத்தான்.
மூன்றாந்தரப்பு மத்தியத்துவத்தை முன்மொழிந்தோம்.
வழிமொழிய வேண்டியவர்கள் வாயடைத்துப் போனார்கள்.
சமாதானத்துக்கான சாரங்களை விரித்தோம்
சமருக்கான களங்களையே அவர்கள் விஸ்தரிக்கின்றனர்.
போரைநிறுத்திப் பேசலாம் வருக என்றால்
பலமிழந்து போனதால் பணிந்து போகநேரமென
எள்ளலும் எகத்தாளமுமாக
எரிவார்த்தைகளைக் கொட்டுகின்றனர்.
போரற்ற நூற்றாண்டைக் காணவிளைந்தோம்
போருக்கான ஆண்டெனப் பிரகடனம் செய்துள்ளனர்
குருசேத்திரத்திற்குத் தேதிகுறிக்க
சேனாதிபதிகள் திக்விஜயமும் புறப்பட்டுவிட்டனர்.
எதிரிக்கு எதிரி எனக்கு நண்பனென
ஒடுகாலிகளை அழைத்து உபசாரம் செய்கின்றனர்.
சரி; அவர்களுக்காயினும் சரியாசனம் கொடுத்தார்களா?
தாழ்வாரத்தில் வைத்துத்தானே சாப்பாடு போடுகின்றனர்
புலிகளை அழிப்பது தமிழரை அழிப்பதே என
சரியாகத் தெரிந்துகொண்டது சந்திரிகா அரசு.
கொழும்பில் 'கதிர்காமமகரிஷி' யை வைத்து
'அராஜகஆச்சிரமம்' நடத்துகின்றார் அரசி.
கண்களைக் கத்தியாற் தோண்டுவதுதானே குற்றம்
கைவிரலால் குத்துவிப்பது எப்படிக்குற்றமாகும்?
விந்தையறிந்தவர்கள் விளையாடுகின்றனர்.
பாவம் செய்த தமிழனே!
உனக்கெவர்தான் பரிதாபப்படுவரோ?
தமிழனைப் பகையழிக்க சம்பவம் கிடையாதே

\- வியாசன்

தமிழனைத் தமிழனழிக்க கதைதானே தமிழர் வரலாறு
அது இன்றும் தொடர்கிறது.
தொழும்வாழ்வு அற இன்றாயினும் எழுந்தாயே
தரும் இது.
புலியான வாழ்வே உனக்குப் பெருமைதந்தது.
அடிமையாய்க் கிடந்தபோது யாருன்னை மதித்தார்?
உழக்கிச் சென்றனர் எல்லோரும்.
புலியெனத் தலைநிமிர்ந்த பின்னரே
உன்னை ஒளிவட்டம் சுற்றிக்கொண்டது.
நேற்றுவரை உனக்கு என்னபெருமை?
காற்றில் சருகான சிறுமை.
கேட்டுப்பார் யாருன்னைக் கணக்கிலெடுத்தார்?
மலேசியாவில் கூலி
சிங்கப்பூரில் சித்தாள்
ஆபிரிக்காவில் அடிமை
பர்மாவில் தூக்கப்பட்ட வேண்டாதான்.
இத்தனை கோடிபேர் இருந்தும்
இந்தியாவில் மட்டும் என்னவாம்.
ஆரியனுக்கு அடிமைதானே.
கோயில்கட்டிக் கும்பாபிஷேகம் நடத்திய போதும்
நீ வாசலுக்கு வெளியே நின்றுதானே வணங்கினாய்.
உன் யானைப்பலமறியாது நசிந்தாய்
ஆரியன்தானே ஆண்டான்.
இலங்கையிலாவது துலங்கினாயா?...... இல்லை
காலத்துக்குக் காலம் காலால் மிதிபட்டும்
வருடமொருதடவை வதைபட்டும்
புலியாகுமட்டும் நீ பிச்செறியப்பட்டாய்.
பின்னர்தானே பேசும் பெருமையாய்
இன்று உலகெங்கும் உனக்கு வேர்கள்
வையப்பரப்பெங்கும் இன்றுனக்கு வாய்கள்.
தளத்தில் 'வெல்வோம்' மென்ற நம்பிக்கையுடனும்
புலத்தில் 'தோற்கவிடோம்' என்ற துணிவுடனும்
எல்லோரும் ஒன்றான ஒருவாழ்வு தரித்தது.
சாவுவரினும் வாட்டும்
போதும் நீயமட்டும் [illegible]
சின்னஞ்சிறு வன்னியே! சிலிர்த்து நிற்கின்றாய்.
உன் நிமிர்ந்த வாழ்வைத்தானே நிலமெல்லாம் பேசுகிறது
எவரெவர் காலமெல்லாம் கழுவிச்செல்கிறது காற்று.
காற்றை எவராவது கணக்கிலெடுத்தார்களா?
புயலாக மையங்கொண்ட போது மட்டும்
வானொலி வாய்களெல்லாம் அலறுகின்றன.
அடங்கிக்கிடந்தபோது தமிழனையெவரும்
ஆதரிக்கவில்லை
கழிவுவாய்க்கால் கழுவும் ஒருவனாக
கரிமண்டிக்கிடக்கும் அருவருக்க பொருளாக
காலத்தொடக்கூடக் கூசும் பிண்டமாகத்தானே கருதினர்.
இன்றுனக்கு எத்தனை பெரியவாழ்வு.
புலியென்றால் தமிழனென்றுரைக்கிறது புதிய அகராதி.
தமிழனென்றால் புலியென அலறுகிறது சந்திரிகா அரசு
திசைக்கொன்றாய் உன்னுறவுகள் சிதறியபோதும்
தமிழனென்றதும் தலைசாய்க்கிறது.
மூச்சாக நாமிருப்போம் முன்னேறுங்களென்று
புலத்திலிருந்து வரும் குரல்கள் புல்லரிக்க வைக்கிறது.
போதுமடா உனக்கிந்தப் பெருமை.
உலகமெங்கும் தமிழன் உன்னால் நிமிர்ந்தான்.
அவர்களாலேயே நீ அலங்கரிக்கப்படுகின்றாய்.
நேற்று வன்னிக்கொரு வரலாறிருந்தது
இன்றும் இருக்கின்றது.
நாளையும் இருக்கும்.
வாழ்ந்தால் தமிழனென்ற வரலாறு வேண்டும்
இல்லையேல்
விடுதலைக்காகப் போராடி
வீழ்ந்தான் என்றாவது சொல்லி விட்டும் காற்று
அசைக்கிற கதவை
வருவது உறவானால் வரவேற்போம்.
பகைவரேயாயினும் வாட்டும்.
கொல்லைப்புறத்தில் குழிபறிப்போம்.

* * *

ஊரெல்லாம் தீயில் உழன்றாலெனினும்
உயர்ந்தன தமிழரின் தலைகள்.
வேரறுந்து வீழ்ந்தன மரங்கள்
விசும்பறுப்பது காடுவன்னித்
வீரிய தளிர்கள் பொசுங்கியதனைத்தும்
பூத்தன தீச்சுவாலையுடன்
நீறின யாவும் நிமிர்ந்தன பசிய
நிலமென வாழுது தாய்மண்.